# மேற்கே செல்லும் விமானம் 4

மோகன் கிருட்டிணமூர்த்தி



பாகம் நான்கு

Copyright (c) 2015 Mohan Krishnamurthy. All rights reserved.

No part of this book can be copied, distributed, reproduced or transmitted in any form or means including photocopying, mechanical, electronic, recording or otherwise without the prior written permission from the author. This book is licensed only for your personal use, not meant to be resold.

Originally written in August 2006. Published in 2015 for eBooks publishing platforms. Please contact at leomohan@yahoo.com for feedback and review.

Cover page image courtesy: http://www.pixabay.com bound by Creative commons Deed CC0. Thanks to the original artist.

# 1

ராஜகோபால் தன்னுடைய நியூ ஜெர்ஸி வேலையை விட்டுவிட்டான். ஆனாலும் அவர்கள் அவனை விடுவதாய் இல்லை. சென்னை டைடெல் பார்க்கில் ஒரு புதிய நிறுவனம் துவங்கி மென்பொருள் தயாரிக்கும் பகுதியின் தலைமை அலுவலராக அவனை ஆக்கி வழி அனுப்பினார்கள்.

தன்னிடமிருந்த சேமிப்பை வைத்து அடையாரில் ஒரு வீடு வாங்கினான். ஒரு மாருதி 800 வாங்கினான். சிலியாவை திருமணம் செய்துக் கொண்டு விழுப்புரம் வீட்டை காலி செய்யச் சொல்லி பெற்றோர்களையும் கூடவே அழைத்து வந்துவிட்டான்.

எல்லாம் சரியாக செல்வது போல் தோன்றியது. தன் ஆத்மார்த்த காதலியை துணைவியாக அடைந்ததில் ஒரு பெரிய மகிழ்ச்சி அவனுக்கு. வெள்ளைக்காரி மருமகளாக வந்தாலும் தாங்கள் விரும்பியவாறு வந்தமைந்ததற்காக பெரிய திருப்தி அடைந்தனர் அவன் பெற்றோர்.

அவளுடைய குடியுரிமையை மாற்ற பல அலுவலகங்களுக்கு இன்னும் அலைந்த வண்ணம் இருந்தான் ராஜ். முரளி தான் அவர்கள் சென்னையில் செட்டிலாக உதவிக் கொண்டிருந்தான். ராஜூவும் கிருஷ்ணனும் கூட முற்றிலுமாக சென்னைக்கு குடி பெயர்ந்துவிட்டார்கள்.

5 நாட்கள் அலுவலகம் என்றிருந்தாலும் வேலை பளு இந்தியாவில் அதிகம் என்பதை உணர்ந்தான்.

காந்தி நகரை கடந்து ஒரு யூ வளைவு எடுத்து மத்திய கைலாஷ் கோவிலை

கடக்கும் போது தன்னையும் அறியாமல் பாம்பு படம் காட்டுவது போல் வலது கையை குவித்து உதட்டின் கீழ் இரண்டு முறை கொத்திக் கொண்டான்.

சனி விடுமறை. அதனால் பல மணி நேரம் தூங்கிக் கழித்துவிடுவான்.

சிலியா வந்த புதிதில் அனைத்தும் 'என்ன என்ன' என்று ஆர்வமாக கேட்டுக் கொண்டிருந்தாள். ஆனால் அவளிடத்தில் ஒரு மாற்றத்தை கண்டான் ராஜ். அவள் பேசுவதை குறைத்திருந்தாள். தனிமையில் இருக்கவே விரும்பினாள்.

காதல் கணங்கள் குறைந்து வருவதை கவனித்தான் ராஜ். நேராக தன்னுடைய அறைக்கு சென்று அமர்ந்ததும், தொலைபேசியை எடுத்து, "முரளி, ராஜ் பேசறேன்டா" என்றான்.

"சொல்லுடா".

"சிலியா ரொம்ப டிப்ரெஸ்டா இருக்கற மாதிரி தோனுதுடா" என்றான்.

"ஏன் என்னாச்சு" என்றான் முரளி பதட்டத்துடன்.

"தெரியலை".

"அவளை எங்காவது வெளியே அழைச்சிகிட்டு போறியா".

"சனி டயர்டாக தூங்கிடறேன்டா. ஞாயிறு கர்நாடிக் இசை கச்சேரி, எஸ்வி சேகர் கிரேஸி மோகன் டிராமா, லக்ஷ்மன் சுருதி, கோவில் இப்படி எங்க போனாலும் எல்லாரும் சேர்ந்து தான்டா போறோம்".

"டேய் முட்டாள். அவ அமெரி்க்கா பொண்ணுடா. உன்னை காதலிச்சான்றத்துக்காக நீ ரசிக்கிற எல்லா கருமத்தையும் அவளும் ரசிக்கனும்னு எதிர்பார்க்கிறியா. எஸ்விசேகர், கிரேஸி டிராமா மெட்ராஸ்ல பொறந்து வளர்ந்தவங்களுக்கே புரியறதில்லை".

"என்னடா சொல்றே".

"சாப்பாடு".

"முழு வெஜிடேரியனா மாறிட்டாடா".

"போடா ம...ரு, நாளைக்கு என்ன கிழமை. வியாழன். சரி. லீவ் போடு. சத்யம் இல்லாட்டா மாயாஜால் அழைச்சிகிட்டு போ. ஹாலிவுட் படம் காண்பி. அப்புறம் ஏதாவது அமெரிக்கன் ரெஸ்டாரெண்ட் அழைச்சிகிட்டு போ. அப்பப்ப அவள் அமெரிக்கன் அப்படிங்கறதை மறக்காதே. புரிஞ்சுதா".

"ம்".

"என்ன ம்ம்".

"செய்றேன் டா. சரி அப்புறம் போன் செய்யறேன்" என்றான்.

# 2

மறுநாள் வழக்கமாக எழுந்திருக்கும் நேரத்தில் எழுந்திரிக்கவில்லை ராஜ். அவன் பெற்றோர்கள் சிலியா அனைவரும் பூஜை செய்து முடித்திருந்தனர். அவள் காபியோட அவன் அறைக்கு வந்தாள்.

"எழுந்திரி ராஜ். என்ன டயர்டா. 8 மணியாகுது" என்றாள் சிந்து.

படுத்தவாறே அவளை நோக்கி இடது கையை நீட்டினான். அவள் கை கொடுக்க அவளை அருகில் இழுத்து அமர்த்தினான்.

"இன்னிக்கு ஆபீஸ் லீவ்" என்றான்.

"என்ன. எதுக்கு லீவ். என்னாச்சி. உடம்பு சரியில்லையா" என்றாள்.

"இல்லை. இன்னிக்கு முழுசும் உன்னோட நேரம் செலவிடப்போறேன். முதல்ல ஒரு சினிமா. அப்புறம் டின்னர்" என்றான்.

"என்ன திடீர்னு" என்றாள் சுரத்தில்லாமல்.

"சும்மா தான்".

"என்ன படம்".

"நீ வாயேன்".

"சரி" என்று சொல்லி விலகினாள்.

அவன் யோசனையில் ஆழந்தான்.

சுமார் 11 மணி அளவில் புறப்பட்டு திருவான்மயூக் கடந்து ஈஸ்ட் கோஸ்ட் ரோடு பிடித்து மாயாஜாலை சென்று அடைந்தான். டிக்கெட் வாங்கிக் கொண்டு திரையரங்கில் நுழைந்தனர் இருவரும். நல்ல மசாலா ஆங்கில படம்.

பார்த்து வெளியே வந்ததும் சற்று தூரம் காரை ஓட்டி வந்து அந்த அமெரிக்க உணவுச் சங்கிலியின் பிரபல கடையில் நிறுத்தினான்.

பிடிக்கிறதோ பிடிக்கலையோ அவர்கள் போடும் முரட்டு ரொட்டியில் தூவியிருக்கும் கேள்விப்படாத வகை காய்கறிகளை கொழுப்பு சத்தோடு தின்றுவிட்டு தண்ணீரில் நிறம் போட்டு அதை வாய்க்கு வந்தவிலைக்கு விற்பதையும் உணராமல் வாங்கி குடித்தவாறே நுனிநாக்கில் "யு சி" என்று ஆங்கிலத்தில் அலட்டிக் கொள்ளும் மேற்காக மாறிவரும் தமிழக கூட்டம் ஒன்று திரிந்துக் கொண்டிருந்தது. ராஜ் இங்கெல்லாம் போக மாட்டான். அவனுக்கு சரவணபவன், சங்கீதா, ஆனந்த பவன், கீதா பவன் தான். தனியாக இருந்தால் எந்த சிறிய கடைக்குள்ளும் நுழைந்துவிடுவான்.

"ஒரு சிக்கன் நக்கெட்ஸ், ஒரு ஹாம்பர்க்கர்" என்று சொன்னான்.

அதுவரை அமைதியாக இருந்த சிலியா "யாருக்கு" என்று கேட்டாள் காட்டமாக.

"உனக்குதான் சிலியா. நீ ரொம்ப நாளா நான்-வெஜ் சாப்பிடலை. ஹாலிவுட் படம் பார்க்கலை. அதனால தான் இந்த ட்ரீட்".

"நான் வெஜிடேரியனாயிட்டேன்னு உனக்கு தெரியாதா".

"எனக்காக நீ பண்ண தியாகம் போதும் சிலியா. நீ இயல்பா இரு".

"புல் ஷிட்" என்றுவிட்டு விரைவாக வெளியே சென்று காரின் கதவின் மேல் சாய்ந்து நின்றாள்.

"ஆர்டர் கான்ஸெல்" என்றான் ராஜ்.

"இல்லை சார் சொல்லியாச்சு ஏற்கனவே" என்றார் பரிமாறும் இளைஞர்.

சட்டென்று வாலெட்டிலிருந்து இரண்டு 100 ரூபாய் தாட்களை எடுத்து கொடுத்து விட்டு ஓடிச் சென்று அவளருகில் நின்றான்.

மெதுவாக தன் வலது கையால் அவள் இடது கையை பிடித்தான். அவள் சட்டென்று அவன் மேல் சாயந்து அழ ஆரம்பித்தாள்.

அவளுடைய மன கலக்கம், மன அழுத்தம் இதற்கான காரணம் என்ன என்று ஒன்றும் விளங்காமல் கலங்கினான்.

அவள் எந்த வித ஆடைகள் அணியவும் முழு சுகந்திரம் கொடுத்திருந்தார்கள் அவன் பெற்றோர். அவளும் சில நாள் டீ ஷர்ட் ஜீன்ஸ் அணிந்துவருவாள்.

இவன் வழக்கமாக செல்லும் கோவில்களில் அவளை அனுமதிக்கிறார்கள்.

யாரும் அவளை தனியாக நடத்தியதில்லை.

அவனுக்கு வேலை அதிகம். ஆனாலும் அவன் அவள் மேல் வைத்திருந்த அன்பு கொஞ்சம் கூட குறையவில்லை. அப்படியிருக்க இவளுக்கு என்ன டிப்ரெஷன் என்று அவனுக்கு புரியவில்லை.

ஒன்றும் பேசாமல் அவளை கைபிடித்து காரை சுற்றி வந்து கதவை திறந்து அவளை அமரச் செய்தான். பிறகு நேராக பெசன்ட் நகர் கடற்கரைக்கு சென்று வண்டியை நிறுத்தினான்.

அவளை அழைத்து சென்று அலைகள் தொட்டுச் செல்லும் விளிம்பில் சென்று

அமர்ந்தான்.

சில நிமிடங்கள் இருவரும் பேசவில்லை.

"சிலியா" என்று மெதுவாக அவளை இழுத்து தன் தோள்களில் சாய்த்துக் கொண்டான் ராஜ்.

"சிலியா... உனக்கு என்ன பிராப்ளம்" என்று கேட்டான்.

"தெரியலை". அவள் அழுகையை கட்டுபடுத்த முடியாமல் தேம்பினாள்.

"உடம்பு கிடம்பு ஏதாவது சரியில்லையா".

"இல்லை. நல்லாதான் இருக்கேன்".

"அப்பா அம்மா ஏதாவது சொன்னாங்களா".

"சே. அப்படியெல்லாம் இல்லை".

"பின்னே ஏன் நீ டல்லா இருக்க. முன்னவெல்லாம் துருதுருன்னு இருப்பியே".

"தெரியலை".

"நீ வேலைக்கு போக ஆசைப்படறியா. ஏதாவது பல்கலைகழகத்தில அப்ளை பண்றியா".

பதில் சொல்லாமல் அமைதியாக இருந்தாள்.

சூரியன் கடலுக்குள் ஒளிந்துக் கொண்டிருந்தாலும் ஒரு முறை வெளியே சட்டென்று வந்து சென்றது போல் இருந்தது அவனுக்கு.

"சரி நாளைக்கு அம்மாவை பார்க்க போகலாமா" என்றான் ராஜ்.

அவள் கண்ணுக்குள்ளும் அந்த சூரியன் சட்டென்று வந்து மறைந்தான்.

"சரி" என்றாள்.

அவளை அழைத்துக் கொண்டு வீடு திரும்பினான்.

மாடிக்குச் சென்று கஸ்தூரிபாய் நகர் மாடி ரயில் போகும்வரை காத்திருந்துவிட்டு முரளிக்கு போன் செய்தான் ராஜ்.

"மச்சான் வொர்க் அவுட் ஆகலைடா. அவளுக்கு படமும் பிடிக்கலை. பர்கரும் வேண்டாம்னு சொல்லிட்டாடா".

"ம். ஒரு குழப்பமா இருக்கே".

"நாளைக்கு அவளை விழுப்புரம் அழைச்சிகிட்டு போகலாம்னு இருக்கேன்".

"அம்மனை தரிசனம் செய்யறதுக்கா".

"ஆமாம்".

"சரி போயிட்டுவா. அதுக்குள்ளே நான் என்னோட ஹோம் மினிஸ்டிரியோட பேசிட்டு என்ன பண்ணலாம்னு சொல்றேன்" என்றான்.

வீட்டுக் கணினியை தட்டி அமெரிக்காவில் இருக்கும் தலையகத்திற்கு இன்னும் ஒரு நாள் விடுப்பு தேவை என்று எழுதிவிட்டு சென்று உறங்கினான்.

# 3

மறுநாள் காலையில் பெற்றோர்களிடம் சொன்ன உடனேயே அவர்கள் நிலைமை புரிந்துக் கொண்டு "சென்று வா" என்றார்கள்.

வண்டியில் பெட்ரோல் முழுவதுமாக நிரப்பிக் கொண்டு, குடிநீர், நொறுக்குத்தீணி எடுத்துக் கொண்டு கிளம்பினர் சிந்துவும் ராஜகோபாலும்.

"சிலியா, உன்னோட சந்தோஷம் தான் என்னோட சந்தோஷம். இது உனக்கு தெரியுமா" என்றான்.

"தெரியும்" என்றான்.

"நீ சந்தோஷமா இருக்கியா".

"தெரியலை".

"நீ அமெரிக்காவை மிஸ் பண்றியா".

"தெரியலை".

"வேணும்னா நீ 1 மாசம் நியூ ஜெர்ஸி போயிட்டுவர்றியா".

"உன்னை விட்டு தனியா இருப்பேன்னு நினைக்கிறியா".

"சரி. நானும் வர்றேன். இரண்டு பேரும் போயிட்டு வருவோமா".

"வயசான காலத்தில உங்க அப்பா அம்மாவை தனியா விட்டுட்டு போகனும்னு சொல்றியா".

"ரீட்டாவை வேணும்னா இங்க வரச் சொல்லலாமா".

"தேவையில்லை".

"உங்க குடும்பத்தில யாரையாவது மிஸ் பண்றியா".

"நீ, உங்க அப்பா-அம்மா இவங்க தான் என் பேமிலி".

"சிலியா, அழகு தேவதையே அமெரிக்காஸ் என்வி, நீ இந்தியாஸ் ப்ரைட்" என்றான்.

"என்ன கவிதையா".

"ஒரு முயற்சி தான். நிறைய கவிதை எழுதியிருக்கேன்".

"அப்படியா. எனக்கு காட்டவே இல்லையே".

"அதெல்லாம் தோல்விக் கவிதைகள். நீ என்னோட இல்லாதப்ப எழுதினேன். இப்பத்தான் நீ எனக்கு கிடைச்சிட்டியே".

"எனக்கு ஏன் காட்டலை".

"விடு".

"சரி".

"சிலியா, நீ வேலைக்கு போகனும்னு ஆசைப்பட்டா போகலாம். எனக்கு ஒன்னும்

ஆட்சேபனை இல்லை".

"நீ யாரு ஆட்சேபனை செய்ய" என்றாள்.

மெல்லச் சிரித்தான் ராஜ்.

"நீ தான் என் உயிரை. என்னை இயக்க வைக்கும் சக்தி சிலியா" என்றான் மென்மையாய், ஆறுதல் அளிக்கும் வகையில்.

"தாங்கஸ். ஐ லவ் யூ ராஜ்" என்றாள் சிலியா.

"காபி சாப்பிட போகலாமா" என்பது போல சாதாரணமான, உணர்ச்சிகளற்ற வார்தை போல் இருந்தது அவள் சொன்ன 'ஐ லவ் யூ'. ஆசை இல்லை, காதல் இல்லை, அன்பு இல்லை. கடமை போல் இருந்தது. ஏதோ கஷ்டத்தில் இருக்கிறாள். அதை வாய் திறந்து சொல்ல முடியாத குழந்தை போல் இருக்கிறாள். அவளுடைய frustration, depression இவற்றிற்கு காரணம் அறியாமல் திணறினான்.

முண்டியம் பாக்கம் கடந்து ராவுத்தர் மில்லிலிருந்து இடது கை பக்கம் சிறிய சந்தில் வண்டியை ஓட்டிச் சென்று செல்லியம்மன் கோவிலின் அருகில் நிறுத்தினான்.

மதியம் ஆகியிருந்தது. கோவில் சாத்தியிருந்தது. ஆனால் கம்பி கதவுகளின் இடையே அம்மனை காண முடிந்தது. அம்மனுக்கு அலங்காரம் இல்லை. அவள் முகத்தில் புன்னகை இருந்தது. ஆனால் களை இல்லை.

திரும்பி சிலியாவை பார்த்தான். அவள் முகத்திலும் களை இல்லை.

"அம்மா, உன் முகத்திலிருந்த களையோட உன் குழந்தை முகத்திலிருந்த களையும் காணாமல் போய்விட்டதே. அவளுக்கு என்ன பிரச்சனை என்று தெரியவில்லை. அவள் முகத்தில் களை கொண்டு வா. உன் முகத்தில் தானாக களை வரும்" என்று வேண்டிவிட்டு கம்பிக்கு இடையில் கை விட்டு குங்குமத்தை

எடுத்து அவள் நெற்றியில் இட்டான்.

செல்பேசி ஒலித்தது. சட்டென்று வெளியே சென்று போனை எடுத்தான். முரளி தான். "மச்சான் இன்னிக்கு ராத்திரி எத்தனை மணியானாலும் வீட்டுக்கு வா. ப்ரவீணா ஒரு யோசனை சொல்லியிருக்கா" என்றான்.

"சரி" என்றுவிட்டு வைத்தான்.

சிலியா கும்பிட்டுவிட்டு வந்தாள்.

யாரையும் விழுப்புரத்தில் பார்க்கும் நிலையில் அவன் இல்லை. அவன் வந்துவிட்டு பார்க்காமல் சென்றான் என்று தெரிந்தால் பாலாவும் சத்யாவும் நல்ல பாட்டு கொடுப்பார்கள். ஆனால் சிலியாவை அதிகம் தொந்தரவு செய்ய விரும்பாமல் வண்டியை எடுத்து செல்வன் ஹோட்டலில் லேசாக சாப்பிட்டுவிட்டு கிளம்பினார்கள்.

வரும் வழியில் பேசாமல் வந்தனர் இருவரும்.

பேசுவதற்கு ஒன்றுமில்லை என்பது போல் இருந்தது. அவன் பெரும் குழப்பத்தில் இருந்தான். சாதி விட்டு, மதம் விட்டு, நாடு விட்டு திருமணம் புரிந்துக் கொண்டது தவறோ. இப்படி ஒட்டில்லாமல் இருக்கிறாளே. என்ன செய்வது. அவளுக்கும் சந்தோஷம் இல்லாமல் மற்றவர்களுக்கும் சந்தோஷம் இல்லாமல் என்ன வாழ்கை இது.

மறுபடியும் அமெரிக்காவே போய்விடலாமா. அங்கு ஒருவேளை நிம்மதியாக இருப்பாளா. இங்கு வேலைக்கு சேர்ந்தால் சந்தோஷப்படுவாளா.

வண்டியை ஒரு ஓரத்தில் ஒரு பெட்டிக் கடையின் அருகில் நிறுத்தினான். ஒரு சிகரெட் வாங்கி வாயில் வைத்தான். அவள் அமைதியாக இருந்தாள். பிறகு பற்ற வைத்தான். அவள் ஒன்றும் சொல்ல வில்லை. "சே, ஏதாவது வெறுப்பேற்றலாம் என்று பார்த்தால் அமைதியாக இருக்கிறாளே" என்று நினைத்துக் கொண்டே புகைக்காமல் அதை தூக்கி எறிந்துவிட்டு வண்டியை துவக்கினான்.

அவள் மெல்லப் புன்னகைத்தாள். பல வாரங்களில் முதல் புன்னகை. மெதுவாக அவள் கையை பிடித்தான்.

4வது கியிரில் வண்டியை போட்டுவிட்டு சீரான வேகத்தில் ஓட்டினான்.

"சிலியா, வசுதேவனுக்கு 7வது பிறந்த குழந்தை தான் பலராமர் தெரியுமா. 8வது குழந்தையால் தான் தனக்கு சாவுன்னு தெரிஞ்சாலும் விஷ்ணு ஏதாவது மாயையை செய்து பிறந்துவிடுவாருன்னு சொல்லிட்டு கம்சன் தேவகியோட எல்லா குழந்தைகளையும் கொல்லச் சொல்றான். பலராமரை கொல்ல வரும்போது ஒரு பாம்பாக மாறி அவனை பயம்புறுத்தராரு. 8வது குழந்தையா கிருஷ்ணரும் பொறக்கறாரு. எத்தனை முயற்சி பண்ணாலும் அவனால அவதார கிருஷ்ணனை கொலை பண்ண முடியலை. பூத்னா அப்படின்னு ஒரு ராட்சஸி அனுப்பறாரு. அவ தன்னுடைய முலையில் விஷம் நிரப்பி கிருஷ்ணனுக்கு பால் கொடுத்து கொல்ல முயற்சி பண்றா. ஆனா கிருஷ்ணன் அவளை கொல்றாரு. இன்னும் எத்தனையோ முயற்சி செய்தும் தோத்து போறான். அப்ப கம்ஸனோட நண்பன் ஒரு பயங்கரமான ஆயுதத்தை உபயோகிக்கச் சொல்றான்". இப்படி சொல்லிவிட்டு சற்றே நிறுத்தினான் ராஜ்.

"என்ன ஆயுதம்" என்றாள்.

அவள் ஆர்வம் காட்டுகிறாளா என்பதை அறிவதற்காகவே அப்படி நிறுத்தினான் இடையில்.

"அந்த ஆயுதத்தின் பெயர் தான் காத்திருக்கும் ஆயுதம்".

"அப்படின்னா".

"அப்படின்னா நாம் செய்ய போற காரியத்துக்கு ஏற்ப சுழல் அமையலைன்னு தெரிஞ்சும் மீண்டும் மீண்டும் ஒரு காரியம் செய்ய முயற்சி பண்ணி தோற்றுப்போறது முட்டாள்த்தனம். அப்ப நாம் காத்திருக்கறது தான் நல்ல ஆயுதமா பயன்படுத்தனும். உனக்கு என்னப் பிரச்சனை அப்படின்னு எனக்கு தெரியலை. ஆனா நம்பிக்கை விட்டுடாதே. காத்திரு. எல்லாம் சரியாயிடும்".

"நல்லா கதை சொல்றே" என்றாள்.

வீட்டில் அவளை இறக்கிவிட்டு, "நான் முரளியை பார்த்திட்டு வர்றேன்" என்றான் ராஜ்.

"என்ன விஷயம்".

"தெரியலை கூப்பிட்டான்".

"எப்போ".

"நீ கோவில்ல இருக்கும் போது போன் வந்தது".

"அப்படியா. எங்கே காட்டு" என்றாள்.

ஒரு அமெரிக்கப் பெண். ஒருவருடைய தனிமைப்பட்ட விஷயங்களில் தலை இடக்கூடாது என்று அறிந்தவள். இதுவரையில் இவனுக்கு வந்த கடிதங்களை படிக்காதவள். மொபைலில் யாருக்கு போன் செய்தான், யாரிமிருந்து போன் வந்தது எனும் பார்க்கும் பழக்கம் இல்லாதவள், அவனே தன் மின்னஞ்சல் பெட்டியை திறந்து வைத்திருந்தாலும் அந்த கணினி பக்கத்தை மூடிவிட்டு தன் வேலையை செய்வள் அன்று முதல் முறையாக அவன் சொன்ன விஷயத்தை நம்பாமல் அவனிடம் செல்பேசி கேட்கிறாள்.

செல்பேசியை எடுத்து முரளி போன் செய்த நேரத்தை காட்டினான். அவள் தலையாட்டி விட்டு உள்ளே சென்றாள்.

இவள் சராசரியாக இல்லை. ஏதோ ஒரு பாதுகாப்பின்மை அவளை ஆட்கொண்டிருந்தது. அவன் மனதை இருள் கவ்வியது. யோசனையுடன் முரளி வீட்டுக் சென்றான்.

# 4

மறுநாளும் விடுமுறை. ஆனால் சரியான நேரத்தில் எழுந்து குளித்து முடித்து பூஜை செய்துவிட்டு செய்தித் தாளை எடுத்துக் கொண்டு வந்து அமர்ந்தான்.

முரளி சரியாக 8 மணிக்கு வந்தான். ராஜின் பெற்றோர்களை அழைத்து சென்றான் மைலம் கோவில் செல்வதற்கு.

வீட்டில் சிலியாவும் அவனும் மட்டுமே.

தன் அறைக்குச் சென்று ஒரு புத்தகம் எடுத்துக் கொண்டான். சில அசைவுகள் எனும் தலைப்பு. எடுத்து படிக்கத் துவங்கினான். வீட்டு வேலைகளை முடித்துவிட்டு அறைக்கு வந்தாள் சிலியா.

அருகில் வந்து அமர்ந்தாள். அவனிடமிருந்து புத்தகத்தை பிடுங்கி கீழே எறிந்தாள்.

"என்னம்மா ... "

"என் கிட்டே பேசு".

"என்ன பேசனும்".

"ஏதாவது பேசு".

"ஒரு கதை சொல்லட்டுமா".

"ம்".

"கிருஷ்ணன் கதை".

"ம்".

"சரி. ஒரு நாள் குட்டி கிருஷ்ணன் என்ன பண்ணாரு.... "

"நீ எனக்கு அறிவுரை தர்ற மாதிரி கதையெல்லாம் வேண்டாம்".

"இல்லை. இந்தக் கதை கேளு".

"ம்".

"வெண்ணெய் வேணும்னு கேட்டாரு யசோதாவை. அவள் தரமாட்டேன் என்று சொல்ல, கெஞ்சி கேட்கிறார். ஒன்றும் வேலைக்காகாமல் போகவே ஒரு கழியை எடுத்து தாழியை உடைத்துவிடுகிறார். அவள் தலை மேல் இருந்ததால் பானை உடைந்து வெண்ணெய் அவள் மேல் விழுகிறது. கோபம் கொண்ட யசோதா அவரை அடிப்பதற்கு துரத்துகிறாள். அவர் கோகுலம் முழுக்க ஓட, தளர்ந்து போன யசோதா அவரை கயிறு எடுத்து உரலுடன் கட்டிவிட முயல்கிறாள்".

"எத்தனை பெரிய கயிறை எடுத்தாலும் இரண்டு அங்குலம் குறைவாகவே ஆகிவிடுகிறது".

"அப்போது இதை பார்த்துக் கொண்டிருந்த நாரதர், தாயே இறைவனை அகங்காரத்தால் கட்ட முடியாது. பல பெரிய மகான்களும் ரிஷிகளும் கோபத்தாலும் அகங்காரத்தாலும் இறைவனை கட்ட முயன்று தோற்றுவிட்டார்கள். ஆத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இந்த இரண்டு அங்குலம் தான் தூரமாக கடைசி வரை நின்றுவிடுகிறது. இந்த இரண்டு அங்குல தூரத்தை கடந்து இறைவனை அடைந்தவர் மிக சொற்ப மனிதர்களே. எப்போது

அகம்பாவத்தை விட்டு கோபத்தை விட்டு அவனை சரணடைகிறோமோ அப்போது தான் அவனை அடையமுடியும். அது கூட நாம் அடைய முடியாது. அவனே உவந்து நம்மை அணைத்தால் தான் அவனுடன் சங்கமமாகிறோம்".

"இது காதில் விழுந்தது போல யசோதா, "என்னால் உன்னை கட்ட முடியவில்லை கண்ணா. நான் தோற்றுவிட்டேன். நீயே சொல். உன்னை எப்படி கட்டுவதென்று என்று கயிறை கீழே போடுகிறாள்.
அவள் சிறியது என்று கீழே போட்ட கயிறை எடுத்து தன்னைத் தானே கட்டிக் கொள்கிறான் கிருஷ்ணர். அவள் வியந்து பார்க்கிறாள்".

இப்படி கதை சொல்லிவிட்டு ஒரு நிமிடம் மௌனமானான் ராஜ்.

"அவ்வளவு தானா கதை".

அவள் அருகில் வந்து, மெல்ல அவள் கைகளை பிடித்துக் கொண்டு, "சிலியா, நீ தான் எனக்கு கிருஷ்ணன். நான் உன் அன்புக்கு ஏங்கும் யசோதா. நீயாக விரும்பினால் தான் நான் உன்னை அறிய முடியும். எனக்கும் உனக்கும் இன்னும் அந்த இரண்டு அங்குல இடைவெளி இருப்பதாகவே உணர்கிறேன். நீ தான் உன்னை புரிந்துக் கொள்ள எனக்கு உதவவேண்டும்" என்றான் உணர்ச்சி வசப்பட்டு.

அவள் அமைதியாக அவனைப் பார்த்தாள். அவளுடைய பரிதவிப்பு அவள் கண்ணில் தெரிவதைப் பார்த்தான்.

அவளை இறுக அணைத்தான். அணைத்தவாறே "சிலியா, ஒரு நல்ல தேவனும் ஒரு அழகான தேவதையும் சேர்ந்தால் ஒரு நல்ல அழகான தேவதை உருவாளா" என்று கேட்டான்.

"இல்லை".

"பிறகு?"

"அந்த தேவனைப் போல ஒரு அழகான தேவன் உருவாகுவான்" என்றாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் இறுக அணைத்துக் கொண்டனர்.

விரைவில் ஒரு குட்டி தேவதை அந்த வீட்டில் வர விதை விதைக்கப்பட்டது.

# 5

கிருஷ்ணனுக்கு சென்ற ஆண்டு மிகவும் கடினமான ஆண்டாக இருந்தது. முதலில் அவன் தந்தை 78 வயது இளைஞர் இறைவனடி சேர்ந்தார். முதல் நாள் வரை சுறுசுறுப்பாக சுற்றிக் கொண்டிருந்தவர்.

ராஜ் முரளி ராஜூ இவர்கள் கூட்டம் அவரிடம் சிறுபிராயத்தில் நன்றாக திட்டு வாங்கியிருக்கின்றனர்.

"அவங்களோட சேர்ந்து தான் நீ கெட்டுப் போறே" என்று கிருஷ்ணனுக்கு நல்ல டோஸ் விழும். ஆனால் இவர்கள் அனைவரும் வாழ்கையில் நல்ல முன்னேற்றம் கண்டதும் அதை கண்டு சந்தோஷப்பட்டவரும் அவர் தான். வீட்டுக்கு வந்தால் ராஜ மரியாதை.

அவர் இறந்தது நண்பர்களுக்கு பெரிய அதிர்ச்சியை தந்திருந்தது.

சில மாதங்களிலே அவனுடைய அண்ணனை பார்க்க ஆஸ்திரேலியா சென்ற அவன் தாயார் முன்னால் அமர்ந்து காரில் செல்ல ஒரு ஹெட் ஆன் கொலிஷனில் கார் விபத்துக்குள்ளாக அந்த இடத்திலேயே உயிரை விட்டார்.

இது இன்னொரு அடி.

அவனுக்கு இரட்டை குழந்தைகள் பிறந்து மிகவும் மகிழச்சி நிலவிய அவர்கள் குடும்பத்தில் இப்படி இரட்டை துக்கம்.

இதிலிருந்து மீண்டு வருவதற்கள் சளி அதிகமாகி மூச்சுவிடமுடியாமல் உறங்கச் சென்ற அவனுடைய இரட்டை குழந்தைகளில் ஒன்று பிறகு எழுந்திரிக்கவே இல்லை.

இது கிருஷ்ணனுக்கும் சுருதிக்கும் பெரிய அடியாக இருந்தது.

வேலையில் நல்ல முன்னேற்றம் அடைந்து வந்த கிருஷ்ணனுக்கு இவையெல்லாம் பேர் இடியாக இருந்தது.

நண்பர்கள் அனைவரும் அவனை "ட்வின்ஸூக்கு அப்பா" என்றே கூப்பிடுவார்கள். இந்த தகுதியை அவன் இழந்திருந்தான்.

நண்பர்களை பார்ப்பதும் குறைத்துக் கொண்டான். இறை பக்தியில் அதிகம் கவனம் செலுத்த ஆரம்பித்தான். தடாலடியாக ஒரே வருடத்தில் தனிமை பட்டுவிட்டது போல அவன் நினைத்தான்.

அவன் எப்போதும் "ராசா ராசா" என்று இவனை கிண்டலாக கூப்பிடுவான்.

"ராசா ராசா" என்று ஒலித்தது. சட்டென்று நினைவலைகளில் இருந்து வெளியே வந்த ராஜ் தான் சிலியாவின் செக்கப்பிற்காக மருத்துவமனை வந்திருப்பதையும் கிருஷ்ணன் வருவதாக சொல்லியிருப்பதையும் அதனால் கிருஷ்ணனைப் பற்றி நினைக்க தொடங்கியிருந்ததையும் உணர்ந்தான்.

"என்னடா மச்சான். என்ன பொண்ணா ஆணான்னு கனவா" என்றான் கிருஷ்ணன். அதே மாதிரி எப்போதும் ஸ்மார்ட்டாக இருந்தான்.

"எப்படா வந்தே கிருஷ்" என்றான் ராஜ்.

"சரியா போச்சி போ. தூரத்திலேர்ந்து என்னை பார்த்திட்டேன்னு நினைச்சேன். கிட்டே வந்து 500 டெசிபல்ஸ் காட்டு கத்தா கத்திகிட்டிருக்கேன்".

"சாரிடா".

"எங்கே சிலியா".

"உள்ளே போயிருக்கா".

"என்னடா விஷமமா".

"ஹா ஹா. ஆமாம். எல்லாம் முரளியோட யோசனை".

"என்னடா உனக்கு குழந்தை பிறக்க அவன் யோசனை கொடுத்தான்னா. அவன் என்ன டாக்டர் மாத்ருபூதமா" என்றான் கிருஷ்ணன் நக்கலாக.

"இல்லைடா. சிலியா ரொம்ப டிப்ரெஸ்டா இருந்தா. என்ன பண்றதுன்னு ஒன்னும் புரியலை. அப்ப முரளி வீட்டுக்கு போனேன். ப்ரவீணா தான் முரளி கிட்டே சொல்லியிருக்கா. குழந்தைக்கு ப்ளான் பண்ணு அப்பத்தான் சிலியாவுக்கு வாழ்கையில் ஒரு பற்றுதல் கிடைக்கும்னு. அதான்".

"நல்ல அட்வைஸ் தான். ரீட்டாவுக்கு குழந்தை பிறந்தது இல்லே. அதை பார்த்துட்டு வந்ததிலேர்ந்து சுருதியும் டிப்ரெஸ்டா இருந்தா. ஒரு வகையான இன்செக்யூரிட்டி. அவளுக்கு குழந்தை பிறந்ததும் தான் அவ சகஜ நிலமைக்கு வந்தா. நான் என்னமோ அவளை விட்டுட்டு போயிடுவேன்னு ஒரு பயம் இருந்தது போல அவளுக்கு".

"அப்படியா".

"ஆமான்டா. எல்லாம் சரியாயிடுத்துன்னு நினைக்கும்போது தான் இந்த அடுத்தடுத்த மரண அடி".

அவனை அணைத்துக் கொண்டு, "கிருஷ், ஒரு அமெஸிங்க் விஷயம் என்ன தெரியுமா. நாம் எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் சந்திக்க கூடிய சஸ்டைனிங்க பவர் நமக்கு கொடுத்திருக்கான் ஆண்டவன். எனக்கு உன்னை பத்தி தான் கவலை. நீ ஒரு குழந்தை. சுருதி பத்தி எனக்கு கவலையே இல்லை. ஷி இஸ்

ப்ரில்லியண்ட். ரீட்டா விஷயத்தை அவள் கையாண்ட விதத்திலேயே தெரிஞ்சி போச்சு. அவ தான் உன்னை கண் கலங்காம பார்த்துக் போறான்னு" என்றான் ராஜ்.

"ஆமான்டா. அவ தான் என்னை பாத்துக்கறா. அதோ சிலியா வர்றா" என்றான் கிருஷ்ணன்.

சிலியா வந்ததும் கிருஷ்ணனை பார்த்து புன்னகைத்தாள். "ஹாவ் இஸ் சுருதி டூயிங்" என்றாள்.

"ஓ. அவ மகாராணி மாதிரி இருக்கா".

"அடுக்கடுக்கா சோதனைகள் உங்கள் வீட்டில். ஹோப் ஷி ஹாஸ் கம் அவுட் ஆஃப் இட்" என்றாள்.

"ஆம். கொஞ்ச கொஞ்சமாக தான்".

ராஜ் எழுந்து "சிலியா, என்ன விஷயம்" என்றான்.

"நாளைக்கு சொல்வாங்களாம்" என்றாள். "நீ போய் ரிப்போர்டு வாங்கிட்டு வர்றியா".

"ஆம். அதைவிட எனக்கு என்ன வேலை" என்றான் கண்ணடித்தபடியே.

கிருஷ்ணன் அவர்களை வாழ்த்தி விடைபெற்றான்.

# 6

மாலையில் அதிக நேரம் வேலை செய்யும் பழக்கம் ராஜகோபாலுக்கு. ஏனென்றால் அமெரிக்கா முழுவதும் இயங்க தொடங்கியதும் வரும் மின்னஞ்சல்களை பார்த்துவிட்டு போவது வழக்கம்.

மணி 9.00 ஆகியிருந்தது. கடைசியாக சில மின்னஞ்சல்களுக்கு பதில் எழுதிவிட்டு கிளம்பும் நேரத்தில் அந்த மின்னஞ்சல் வந்தது. அவனுக்கு ஏற்பட்டது ஆச்சர்யமா அதிர்ச்சியா என்று அவனால் சொல்ல முடியவில்லை.

டான் ஸ்டில், அவனுடைய மேலாளர் எழுதியிருந்தார். மாலினி வேலை விட விரும்பியதாகவும் ஊருக்கு திரும்பிச் செல்ல விரும்பியதாகவும், அவள் திறமை மிக்க மென்பொருள் வல்லுனராதலால் அவளை விட முடியாது என்றும் அதனால் அவளை பதவி உயர்வு கொடுத்து சென்னைக்கு மாற்றல் செய்யததாகவும் இன்னும் 5 நாட்களில் அவள் வேலைக்கு சேருவாள் என்றும் அவளுக்கான காபின் வசதிகள் செய்து தரச் சொல்லியும் தகவல் வந்திருந்தது.

இரு முறை படித்துவிட்டு ப்ரன்ஸ்விக்கு இரண்டுமுறை மனதால் பயணம் செய்துவிட்டு "ஷூர்" என்று ஒற்றை வார்த்தையில் பதில் எழுதிவிட்டு வீடு திரும்பினான்.

இதை சிலியாவிடம் சொல்லலாமா வேண்டாமா என்று குழப்பமாக இருந்தது அவனுக்கு. இப்போதிருக்கும் அவள் மனநிலையில் எப்படி எடுத்துக் கொள்வாள் என்று தெரியவில்லை.

நேராக மருத்துவமனை சென்று ரிப்போர்ட் வாங்கிக் கொண்டான். அங்கிருந்த

நர்ஸ் "நல்ல விஷயம் தான் வாழ்த்துகள்" என்றாள். புன்னகையோடு வாங்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

சிலியாவுக்கு தெரியும் அவன் இன்று ரிப்போர்டோடு வருவான் என்று. ஆவலாக காத்திருந்தாள்.

உள்ளே போனதும் ஹாலில் இருந்த சோபாவின் மேல் அமர்ந்தான். அவனது தாய் தண்ணீர் டம்ளருடன் வந்து "என்ன, டாக்டர்கிட்டே போனியா" என்றார் ஆவலாக.

சிலியா ஆவலுடன் அவன் அருகில் வந்து அமர, அவள் தலையில் கைவத்துக் கொண்டு, "அம்மா சீக்கிரம் ஒரு பேத்தி வருவா உனக்கு, ரூமை ரெடி பண்ணி வை" என்றான்.

அவன் அம்மா உள்ளே ஓடிச் சென்று சர்க்கரை எடுத்து வர, அவன் தந்தை அவன் கையை பிடித்து "கங்கிராஜூலேஷன்ஸ் மை பாய்" என்றார். அவன் அம்மா சிலியாவை கட்டிக் கொண்டார்.

அவள் கண்களில் சுட்டித்தனமான அந்த சிலியா மீண்டும் வந்தாள். அந்த இழந்தக் களை திரும்பி வந்தது. அம்மனுக்கும் களை வந்திருக்கும் என்று நினைத்துக் கொண்டான் ராஜ்.

மகிழ்ச்சி எங்கும் தாண்டவமாட மாலினி ஒரு ஓரத்தில் உறுத்தினாள்.

தொலைபேசி அழைப்புகள் பறந்தன. அவன் ஒரு புறம் முரளி, ராஜூ, கிருஷ்ணன், சங்கர், பாலா, சத்யா என்று தன் நண்பர்களுக்கு போன் போட அவளோ ரீட்டாவுக்கு போன் போட்டு உற்சாகத்துடன் பேசிக் கொண்டிருந்தாள். அவன் அம்மாவும் தன் தோழிகளுக்கு சொல்ல தந்தையோ 'கிருஷ்ணா ஸ்வீட்ஸ் மூடியிருக்குமே இப்போது' என்ற கவலையில் இருந்தார்.

ரீட்டாவுடன் பேசிக் கொண்டிருக்கும் போது போன் இவனிடம் கொடுக்க அவளும் வாழ்த்துகள் தெரிவித்தாள்.

பிறகு இரு தோழியரும் அரை மணிக்கு மேலாக பேசி மகிழ்ந்தனர்.

ப்ரவீணாவிடம் போனில் ராஜ் சொன்னான், "ப்ரவீணா, நீ ஒரு தீர்க்கதரிசி" என்றான்.

அவள் மிகவும் மகிழ்ந்தவாறே, "அடடே நான் ஒன்னும் புதுசா சொல்லிடலையே. இதெல்லாம் ஊர்ல நடக்கறது தானே".

"இருந்தாலும் உலகத்தில் நடக்கற விஷயத்தை கூட நம்மவர்கள் யாராவது சொன்னால் தானே உறைக்கிறது" என்றான் ராஜ் நன்றியுணர்ச்சியுடன்.

# 7

மாலினி ராஜின் அறைக்குள் நுழைந்ததும் ஒரு புதிய நறுமணம் நுழைந்தது கூடவே. நிறைய மாறியிருந்தாள். நகரம் மாநகரமாயிருந்தது. சுருள் முடி. ஜீன்ஸ் பாண்ட், டி-ஷர்ட். உதட்டில் மெல்லிய சாயம். அது அவளுக்கு தேவையிருந்திருக்கவில்லை. முகத்தில் ஒரு அலட்சியம் வந்திருந்தது.

ஒரு அலுவலகத்தில் சேரும்போது அந்த அதிகாரியின் மேலாளரை சந்திப்பது சம்பிரதாயம் தானே.

ராஜ் எழுந்து கைகூலுக்கி வரவேற்றான்.

"என்ன மாலினி ஆளே மாறிட்டே".

"மாறனது வெளி உருவம் மட்டும் தான், கோபால்".

"கோபால். ஆ". வெகுநாட்களுக்கு பிறகு தன்னை அந்தப் பெயரில் அழைக்கிறார் ஒருவர். இதுவரையில் சென்னை வந்ததிலிருந்து சிலியாவை தவிர அவனை பெயர் சொல்லி யாரும் அழைக்கவில்லை. என்ன தான் மேல் நாட்டு கலாச்சாரம் வந்தாலும் இன்னும் இவனிடம் வேலை செய்யும் 20-25 பேர் அவனை 'சார்' என்றே அழைக்கிறார்கள். இது ஆங்கிலேயர் விட்டுச் சென்ற அவலங்களில் ஒன்று.

அவன் இந்த சூழ்நிலையை தவிர்க்க விரும்பினான். வேறு வழியில்லை.

"என்ன அமைதியாயிட்டீங்க கோபால். மாறனது வெளி உருவம் மட்டும் தான். உள்ள அதே மாலினி தான்" என்றாள் அழுத்தமாக.

"என்ன வேலைய விட முடிவு பண்ணிட்டே திடீர்னு. டான் அசந்து போயிட்டாரு. என்ன கல்யாணம் பண்ணிக்கிற திட்டமா".

"இல்லை. கல்யாணத்தை பத்தி யோசிக்கவே இல்லை. எனக்கு அமெரிக்கா தனிமையாக பட்டது. ஒரு வெறுமை அதனால் வந்தேன். எனக்கு இந்த கிளையில் வேலை செய்யும் விருப்பம் இல்லை. ஆனால் டான் தான் வற்புறுத்தினார்".

"ஆம். நீ எங்க கம்பெனிக்கு ஒரு பெரிய அசெட். ஆனா உனக்கு ஏன் விருப்பம் இல்லை. என்னோட வேலை செய்ய விருப்பம் இல்லையா".

"இல்லை கோபால். பழசை நினைவுப்படுத்தற எல்லாரையும் எல்லா சூழ்நிலையையும் தவிர்க்க விரும்பறேன்".

"ஏன் நீ புத்திசாலிப் பெண்".

"புத்திசாலிகளும் காதல் தோல்வி அடைகிறார்கள் கோபால்".

அமைதியானான் ராஜ்.

மாலினி சேர்ந்த விஷயம் அலுவலகத்தில் பரவியிருந்தது. சிறிய பார்டிக்கு அடுத்த வாரம் ஏற்பாடு செய்திருந்தார்கள். மாலினி அழகி என்றும் பாசுடன் வேலை செய்தவள் என்றும் ப்ராஜெக்ட் மானேஜராக வந்திருக்கிறாள் என்றும் அனைவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

மாலினி வெளியே போனதும் அனைவரும் புன்னகைத்து கைகுலுக்கி வரவேற்றனர்.

ராஜ் அலைகழித்துக் கொண்டிருந்தான். ராஜூவுக்கு போன் அடித்தான். அவன்

புதிய நிறுவனத்தில் சேர்ந்திருந்தான். அதனால் வேலை பளு அதிகம். மீட்டிங்க் மீட்டிங்க் என்று சொல்லிக் கொண்டிருப்பான். போனை எடுக்கவில்லை. கிருஷ்ணன். இல்லை. முரளியிடம் இதை பற்றி பேசலாமா.

சரியென்று முரளிக்கு போன் அடித்தான். எப்போதும் முதல் முறையில் போனை எடுக்கும் ஒரு தொழிலதிபர் முரளி.

"சொல்லுடா. இப்ப என்ன பிரச்சனை".

"டேய். இது ஒரு பழைய பிரச்சனை. புது ரூபத்தில். மாலினி".

"அடப்பாவி".

"ஆமான்டா. என் பிரான்ச்சில் சேர்ந்துட்டா".

"ம். சரி நான் சொல்றத கேளு" என்று தன் வங்கியிலிருந்து அறிவுரைகளை அள்ளி வீசினான் ராஜின் குடும்ப ஆலோசகன்.

"இதெல்லாம் நடக்கற காரியமாடா".

"செஞ்சிப் பாரு. வொர்க் அவுட் ஆகலேன்னா கைவசம் நெறைய ஐடியா இருக்குடா".

"சரி" என்று சொல்லி போனை வைத்துவிட்டு யோசனையில் ஆழ்ந்தான். மாலினி சேர்ந்ததை சிலியாவிடம் சொல்லலாமா வேண்டாமா என்ற குழப்பத்தில் இருந்தான்.

# 8

புதிய ப்ராஜெக்ட் கிடைத்திருந்தது. நிறைய பேர்களை அவசரமாக சேர்க்க வேண்டிய நிலை. ஆயிரமாயிரம் பயோ டேட்டாக்களை பார்த்து மனிதவள மேன்பாட்டு மேலாளர் 50 பேரை தேர்ந்தெடுத்திருந்தார். அதில் 11 பேர் வர இயலாது என்று தெரிவித்திருந்தனர். மற்ற 39 பேரில் சிலரை அவரே சந்தித்து அட்டிட்யூட் சரியில்லை என்று நிராகரித்திருந்தார். மீதி இருந்த 30 பேரில் சில மென்பொருள் வல்லுனர்களையும் ஒரு ப்ராஜெக்ட் மேனேஜரையும் தேர்ந்தேடுக்க வேண்டும்.

காலையில் 9 மணிக்கே வந்துவிட்டான் ராஜ். இன்றைய நாள் மிக நீளமான நாளாக இருக்கப் போகிறது என்று நினைத்துக் கொண்டான். கான்பிரென்ஸ் அறையில் ராஜ், மனிதவள மேலாளர் ராஜாராம் மற்றும் மாலினி அமர்ந்திருந்தனர். அலுவலகத்தில் மாலினி சேர்ந்தவுடன் இதுவரை இன்ட்ர்வ்யூ எடுக்க கூப்பிட்டவர்களை கூட ராஜ் கூப்பிடவில்லையே என்று பேசிக் கொண்டனர்.

நேர்முகத் தேர்வு படலம் ஆரம்பமானது. மாலினி தொழில்நுட்ப ரீதியான கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்க, ராஜாராம் குணம், பொறுமை, அணுகுமறை போன்றவற்றை நோண்டிக் கொண்டிருக்க, ராஜ் மட்டும் அங்குமிங்குமாக ஒரிரு கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தான்.

குமார். வயது 28 இருக்கும். 6 அடி உயரம். நல்ல சிவப்பு. சுருள் முடி. பெங்களூரில் பிறந்து வளர்ந்த தமிழன். பி.இ படித்துவிட்டு படிப்பின் ஊடே என்ஐஐடியில் 3 ஆண்டுகள் மென்பொருள் பாடம் படித்துவிட்டு, வெளிநாட்டில் ஒரு வருடமும் பயிற்சி முடித்து ஒரு பெரிய நிறுவனத்தில் வேலை செய்துக்

கொண்டிருந்தான். இரவு முழுவதும் பயணித்து வந்ததால் சற்று களைப்பாக இருந்தாலும் அவன் கண்களில் சுறுசுறுப்பு தோன்றியது.

ஒரு நேர்கோட்டில் அமர்ந்து பதிலளித்து கொண்டிருந்தார்கள் அனைவரும். இவனோ சகஜமாக சக்கர நாற்காலியில் மூன்று பேரை மாற்றி மாற்றி பார்த்தவாறே சுழற்றி பேசினான். நடுவில் விட்டுகள் அடித்தான். ராஜூக்கு பிடித்துவிட்டது. ராஜாராமுக்கும் பிடித்துவிட்டது. ஆனால் மாலினி ஒரு தொழில்நுட்ப வேட்டையில் அவனை சரமாரியாக கேள்விகளால் தாக்கிக் கொண்டிருந்தாள். ஏதோ தன்னைவிட அவன் முட்டாள் என்று நிரூபிக்க வேண்டும் என்ற உத்வேகம் இருப்பது போல். அவனும் சளைக்காமல் பேசினான்.

நடுவில் இருவரையும் வழிமறுத்திவிட்டு அவனுடைய குடும்பம் அவனுடைய விருப்ப வெறுப்புகள் என்று பல வேலைக்கு சம்பந்தம் இல்லாத கேள்விகள் கேட்டான்.

அவனை வெளியே அனுப்பிவிட்டு ராஜாராமை பார்த்தான். "ப்ராஜெக்ட் மேனேஜருக்கு மிகவும் தகுதியான ஆள்" என்றார் அவர். மாலதியை பார்த்தான். "கோபால், எனக்கு என்னமோ இவரிடம் அதிக சரக்கு இல்லை என்று தோன்றுகிறது. நீங்கள் இவரை எடுக்க வேண்டாம் என்பது என்னுடைய சிபாரிசு" என்றாள். ராஜ் ஆச்சர்யமானான். ராஜாராமும் ஆச்சர்யமானார்.

"உங்கள் இருவருக்கும் என் நன்றிகள். நான் உங்கள் சிபாரிசுகளை ஏற்று ஒரு முடிவு எடுக்கிறேன்" என்று சொல்லி முடித்தான்.

# 9

சிலியா தாய்மையின் முதல் படியின் சுக-துக்கங்களை அனுபவித்துக் கொண்டிருந்தாள். மிகவும் உற்சாகமாக இருந்தாள். எத்தனை வேலையிருந்தாலும் ராஜ் அவளை மருத்துவமனைக்கு அழைத்து செல்வதும் மருந்துகள் வாங்கி வருவதும் அடிக்கடி போன் செய்து அலுவலகத்தில் இருந்து அவளிடம் பேசுவதுமாக இருந்தான்.

"உன் குழந்தை வரப்போகுது, அதனால என் மேலே திடீரென்று இத்தனை அக்கறையா" என்று நக்கலாக கேட்டாள் சிலியா. சிரித்து மழுப்பினான் ராஜ்.

டிவியின் கேபிள் இணைப்பை முற்றிலுமாக துண்டித்தான். பெற்றோர்களின் அறையில் மட்டும் கேபிள் இணைப்பு இருந்தது. வீட்டிற்கு வந்தால் தொலைகாட்சி பார்ப்பதில்லை என்ற முடிவுக்கு வந்திருந்தான். அவளுடன் பேசுவதும், மாடிக்கு சென்று அவளுடன் 7-8 சுற்று நடப்பதும், என்று அவள் மேல் அதிக கவனம் செலுத்தி வந்தான்.

---

மாலினி வரவேற்பு விருந்து குமாரின் வரவேற்பு விருந்தாகவும் மாறியிருந்தது. அந்த நட்சத்திர ஓட்டல் கோவளம் கடற்கரையில் அமைந்திருந்தது. இரவு முழுவதும் செல்லும் பார்ட்டி என்பதாலும் கருவுற்ற நிலையில் அவளை அலைய வைக்கவேண்டாம் என்றும் சிலியாவை அழைத்துவரவில்லை ராஜ்.

அனைவரும் அவர்களுடைய குடும்பத்தினர், மற்றும் ஆண் பெண் நண்பர்களுடன்

வந்திருந்தனர். பாட்டும், நகைச்சுவை நையாண்டியுமாய் ஒரே கூத்தாக இருந்தது.

தன்னிடம் வந்து புகைப்பெட்டியை நீட்டியவர்களிடம் தான் புகைப்பதில்லை என்றும், மதுபானம் நீட்டியவர்களிடமும் தான் குடிப்பதில்லை என்றும் அமைதியாக சொல்லி அனுப்பியவண்ணம் இருந்தான் ராஜ்.

பார்டிகளில் மேலாளருடன் பயமின்றி பேச ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. அனைவரும் ஒருவர் மாற்றி ஒருவர் அவனிடம் சம்பளம் அதிகம் வேண்டும் என்றோ, அமெரிக்காவில் பணிபுரிய வாய்ப்பு வேண்டும் என்றோ, பதவி உயர்வு வேண்டும் என்றோ தன்னுடைய தேவைகளை சொல்லிக் கொண்டிருந்தனர்.

அனைவருக்கும் பொறுமையாக பதில் சொல்லிக் கொண்டிருந்தான் ராஜ்.

அங்கோ குமார் கலக்கிக் கொண்டிருந்தான். ஒரு பீர் கோப்பையை தலையில் வைத்துக் கொண்டும் வாயில் புகையுடனும் நடனமாடிக் கொண்டிருந்தான். புதிதாக சேர்ந்தவன் போல் இல்லை.

மாலினியின் கண்கள் ராஜை தொடர்ந்துக் கொண்டிருந்தவை, குமார் அடித்த கூத்தினால் அவன் மேல் சென்று நின்றன.

பல பேரை போல் நடித்துக் காட்டுவதும், உட்கார்ந்திருந்தவர்களை இழுத்து வந்து ஆடச் செய்வதுமாக இருந்தான்.

நேராக ராஜிடம் சென்று அவன் தோளில் கைபோட்டு வந்து ஆடச் சொல்லி வற்புறுத்தினான். ராஜூம் சிரித்தவாறு இரண்டு புறமும் கைகளை தட்டி இரண்டு மூன்று ஸ்டெப் போட்டுவிட்டு சிரித்தவாறு ஓரத்தில் சென்று நின்றான்.

ராஜ். சகஜமாக 2000-3000 பேர்களின் கூட்டத்திலும் தன்னை தனிமையாக காட்டும் சக்தி படைத்தவன். பாட்டு, ஆட்டம், கூட்டம் என்றெல்லாம் வந்தால் அவன் கலக்குவதை யாராலும் நிறத்தமுடியாது. அழகிலோ அறிவிலோ அவன் குமாரக்கு சற்றும் சளைத்தவன் அல்ல. அவன் குமார் முன் தோற்றுப்போகவில்லை அன்று. அவனுடைய உயர்ந்த பதவியும் அவனை

தடுக்கவில்லை. ஆனால் அவன் போட்டியில் இல்லை. தான் ஓடுவதின் வேகத்தை குறைத்துக் கொண்டிருந்தான். குமாரை முன்னே ஓடவிட்டிருந்தான். குமாரை ஜெயிக்கவிட்டிருந்தான். காரணம் இல்லாமல் இல்லை.

சுராங்கெனி சுராங்கெனி சுராங்கெனிக்கே மாலுக்கெனவா என்று உயர்ந்த குரலில் பாடிய குமார் பாட்டை மாற்றி சுராங்கெனி சுராங்கெனிக்கே மாலினிகென்னவா என்று பாடலை மாற்றி மாலினியை பார்த்து கை அசைத்தான். பிறகு ஆடிக் கொண்டே வந்தவன் சட்டென்று மாலினியின் இரு கைகளையும் பிடித்து ஆட வற்புறுத்தினான். அவள் சட்டென்று அவன் கைகளை உதறித்தள்ளிவிட்டு ஓடி அலைகளின் விளிம்புற்கு சென்று நின்றாள். குமார் எதைப்பற்றியும் கவலைப்படாமல் ஆடிக் கொண்டிருந்தான்.

சில நொடிகள் அங்கிருந்துவிட்டு ராஜ் மாலினியிடம் சென்றான்.

"என்னாச்சு மாலினி. ஏன் இப்படி நடந்துக்கறே".

"அவன் செய்யறதே எனக்கு பிடிக்கலை".

"ஹேய், இது பார்ட்டி தானே மாலினி".

"அவனை ஏன் செலெக்ட் பண்ணீங்க. நான் வேண்டாம்னு சொன்னேனே".

"மாலினி எனக்கும் ராஜாராமுக்கும் அவன் தகுதியானவன் என்று தோன்றியது. அதனால் எடுத்தோம்".

"அப்ப என் வார்த்தைக்கு மதிப்பில்லையா".

"நிறைய இருக்கு மாலினி. ஆனால் நமக்கு நேரம் இல்லை. அவசரத்தில் ஆள் எடுக்க வேண்டும். வந்தவர்களில் குமார் சிறந்தவன்".

"அது சரி. நீங்க எப்ப என் ஃபீலிங்கை புரிஞ்சிகிட்டு இருக்கீங்க" என்றாள் விரக்தியாக.

அவள் தலையை தட்டிவிட்டு, "யூ வில் பி ஆல்ரைட் சூன்" என்றுவிட்டு அகன்றான்.

"நோ, ஐ வில் நெவர் பி ஆல்ரைட் வித்தவூட் யூ" என்று கத்தினாள் பின்னாலிலிருந்து.

அவன் சிரித்துக் கொண்டே பார்டியில் கலந்துக் கொண்டான்.

# 10

குமார் மறுநாள் அலுவலகம் வந்ததும் மாலினியின் அறைக்கு சென்று மன்னிப்பு கேட்டான். அவள் ஒன்றும் பதில் சொல்லாமல் போகவே தன் அறைக்கு சென்றான் குமார்.

வந்த சில நாட்களில் அனைவருடைய நெஞ்சங்களில் பதிந்துவிட்டான் குமார். ஒவ்வொரு மேசைக்கு சென்று அனைவருடன் பேசுவதும், அவர்களுக்கு உதவுவதும், மென்பொருள் வல்லுனர்களுக்கு ப்ரோகிராம் எழுதி தருவதும், நெட்வொர்க்-பிணையத்தில் இருக்கும் கோளாறுகளை சரி செய்வதுமாக கலக்கிக் கொண்டிருந்தான்.

மாலினி தன் கீழ் வேலை செய்யும் பெண்களை கடந்துச் செல்லும் போது அவர்கள் குமாரை பற்றியே பேசுவதை பார்த்து எரிச்சல் அடைந்திருந்தாள். என்ன இருக்கிறது இவனிடம். ராஜ் மாதிரி அறிவு இருக்கிறதா. அழகு இருக்கிறதா. அவனுடைய முதிர்ச்சி இருக்கிறதா. சே. ராஜ் அன்று பார்ட்டியில் எத்தனை கண்ணியமாக நடந்துக் கொண்டான். இவன் பரக்காவெட்டி மாதிரி குடித்ததும், புகைமண்டலமாக இருந்ததும். ராஜின் கால்தூசிக்கு வருவானா இவன். இந்த பெண்கள் என்ன பைத்தியமா ராஜ் இருக்கும் போது எப்படி இவர்கள் இவனை புகழுகிறார்கள். ராஜைப் பற்றி எனக்கல்லவா தெரியும். இப்படியெல்லாம் அவள் மனதில் எண்ணங்கள்.

தான் வேண்டாம் என்று சொல்லியும் குமாரை எடுத்ததால் கோபால் மீது கடுப்பில் இருந்தாள்.

வெள்ளிக்கிழமை மாலை நேராக குமார் மாலினியிடம் சென்றான். "மாலினி நான்

மெட்ராஸுக்கு புதுசு. பெங்களூரிலே இருந்துட்டேன் இத்தனை நாள். இந்த ஊர் கோவில்கள் சுற்றி காண்பிக்க முடியுமா".

"ஏன். ஆபீஸில் வேறு யாரும் கிடைக்கலையா".

"மாலினி, மத்தவங்கெல்லாம் என் ஜூனியர். அவங்களை அழைச்சிகிட்டு போனா அன்ட்யூ அட்வான்டேஜ் எடுத்துகிட்டு ஏதாவது உதவி கேட்ப்பாங்க. ராஜ் என் சீனியர். ராஜாராமை அழைச்சிகிட்டு போனா ஹெச்ஆர் ஜால்ரான்னு சொல்லிடுவாங்க. நீங்க மட்டும் தான் என்னோட சமமான க்ரேட். அதனால தான். அப்புறம் எனக்கு இன்னும் கார் வரல".

"ம்" என்று யோசித்தாள். பார்டியில் பண்ண ரகளைக்கு மன்னிப்பு கேட்டுவிட்டான். ராஜூம் ராஜராமும் சேர்ந்து 3ல் 2வர் சரியென்று சொன்னாலே வேலைக்கு எடுக்கலாம். அதனால் இவள் வேண்டாம் என்று வேறு யாரை சொல்லியருந்தாலும் அவர்கள் இருவரும் ஆமாம் என்று சொல்லியிருந்தால் அவர்களையும் எடுத்திருப்பார்கள். ஆக குமாருக்கு அவர்கள் இருவரும் ஏதோ சிபாரிசு செய்ததாகவோ தன்னை அவமானப்படுத்தியதாகவோ நினைக்கத் தேவையில்லை. குமார் மீது தனக்கென்ன கடுப்பு. ஒன்றுமில்லையே.

"என்ன மாலினி இத்தனை யோசிக்கிறீங்க".

"போகலாம். நாளைக்கு காலையில் 8 மணிக்கு உங்களை பிக் பண்ணிக்கிறேன். எங்க தங்கியிருக்கீங்க".

"பாச்சுலர் தானே. ஏதோ ஒரு ரூம் எடுத்து தங்கியிருக்கேன் நுங்கம்பாக்கத்தில்".

"நுங்கம்பாக்கத்திலா ஏன் அத்தனை தூரம்".

"நுங்கம்பாக்கத்தில் இருந்தா அத்தனை கலர்பூல் இடத்திற்கும் செல்ல வசதி" என்றான் நகைச்சுவையுடன்.

"சரி நாளைக்கு போகலாம்" என்றுவிட்டு அவள் பேச்சை துண்டித்தாள்.

# 11

சரியாக எட்டு மணிக்கு தன் அறையிலிருந்து கீழே வந்தான். வெள்ளை வேட்டி வெள்ளை சட்டையுடன் குமார்.

"ஹா என்ன இந்த டிரெஸ்" என்று கேட்டாள் மாலினி. அவள் இந்திய நாகரீகத்திற்கு மாறியிருந்தாள். எளிமையான வெள்ளை சுட்டிதாரில் அந்த பழைய விபூதியுடன். காரின் கதவை திறந்துவிட அவன் உள்ளே ஏறி அமர்ந்தான்.

"கோவிலுக்கு போக தனி காஸ்ட்யூம். ஆனா வேட்டிக்கட்டினா நிக்காது, அதனால பெல்ட் போட்டிருக்கேன் பாருங்க" என்றான்.

"ஹா ஹா. நல்ல தமாஷுதான்".

முதலில் வண்டியை எடுத்துக் கொண்டு நங்கநல்லூர் ஆஞ்சநேய கோவிலுக்கு சென்றடைந்தனர்.

ஆஞ்சநேயரை ஆகாய-பூமியை ஒன்றாக சேர்ந்து நிற்கும் கோலத்தை கண்டு லயித்து நின்றான் குமார். பெரிதாக குங்குமம் எடுத்து இட்டுக் கொண்டான். அங்கு கொடுத்த தயிர் சாதத்தை வெளியே நின்று சாப்பிட்டனர் இருவரும். நடந்த வந்து ஸ்ரீ ராகவேந்திரர் மடத்தில் நுழைந்தனர். அங்கு அவருடைய குரு விஜேந்திரரின் ப்ருந்தாவனமும் வந்திருப்பதை விளக்கினாள் மாலினி. பிறகு வண்டியை எடுத்து 2 நிமிடங்களில் கேரள பாணி கிருஷ்ணர் கோவிலில் நுழைந்தனர். அங்கு கொடுத்த சந்தனத்தை உருண்டையாக செய்து நெற்றியில் இட்டுக் கொண்டான். பிறகு வெளியே வந்து நின்று அங்கு கிடைத்த பிரசாதம் சாப்பிட்டனர்.

சட்டை அணிந்து வண்டியில் வந்து உட்கார்ந்த குமாரை பார்த்து, "என்ன இத்தனை பெரிசா குங்கும் சந்தனம் வெச்சிருக்கீங்க. யூத்தா இருக்கீங்க, யாராவது பார்த்தா கிண்டல் பண்ணமாட்டாங்களா".

"மாலினி, நம்மை யாரும் பார்ப்பதே இல்லை. நீங்க ஒரு புது புடவை வாங்கி கட்டிகிட்டு வந்தீங்கன்னா உங்களை இந்த தெருவே பார்க்கற மாதிரி ஒரு உணர்வு ஏற்படும் உங்களுக்குள். ஆனால் யாரும் நம்மை சட்டை கூட செய்வதில்லை. அதுமாதிரி யாரையும் எனக்கும் தெரியாது, யாருக்கும் என்னையும் தெரியாது. நான் எப்படி இருக்கேன்னு யாரும் கவலைப்படப் போவதும் இல்லை. எங்கோ ஒரு புத்தகத்தில் படிச்சேன். உள்ளாடைகள் கிழியாமல் நன்றாக இருந்தால் வெளியேவும் அந்த நம்பிக்கை வெளிப்படும் என்று. தமாஷ். ஆனால் வித்தியாசமான சிந்தனை தான். கால்ல சாக்ஸ் கிழிச்சிருந்தா, நாம ஷூவை கழற்றவே மாட்டோம் இல்லையா" என்றாள்.

"அப்படின்னா அன்னிக்கி நீங்க பார்டியில் டான்சு ஆடி கூத்தடிச்சதை யாரு பார்த்திருந்தாலும் பார்க்காதிருந்தாலும் நீங்க செஞ்சிருப்பீங்களா".

"கட்டாயமா. பார்டியில் வெறும் ஓஸி பீர் கிடைக்குது சாப்பாடு கிடைக்குதுன்னு மட்டும் குஷியாவதில்லை. வழக்கத்திலிருந்து மாறாக வேலை கஷ்டம் இல்லாமல் இருப்பதன் வெளிப்பாடே அது. நீங்கள் பாத்ரூமில் பாடுவீர்களா".

ஓ.

"அது யாருக்காக. நீங்கள் பெட்ரூமில் தனியாக இருக்கும் போது டான்ஸ் ஆடியிருக்கீங்களா".

ஓ.

"அப்ப யாரை கவர அந்த ஆட்டம். அது போலத்தான்".

"அப்ப நீங்க ஏன் என்னை கிண்டல் பண்ணி பாட்டு பாடினீங்க. என் கையை

பிடிச்சி இழுத்தீங்க நடனமாட".

"நம் ரெண்டும் பேருக்குக்தானே அந்த பார்ட்டி. அதனால பாட்டை மாத்தி பாடனேன். ஆனால், நான் உங்களை பிடிச்சு ஆடல. ஆடிக்கிட்டே வந்து அங்கிருந்த யாராக இருந்தாலும் அவங்களை பிடிச்சு ஆடியிருப்பேன்".

இந்த பதிலை சற்றும் மாலினி எதிர்பார்க்கவில்லை. சற்றே குமாரின் மேல் ஆர்வமானாள்.

"நீங்க என்ன புத்தகம் படிப்பீங்க".

"புத்தகங்களா. சே. அந்த பழக்கமே கிடையாது. எப்பயாவது படிப்பேன். பஸ்சுல ட்ரெயின்ல மட்டும்".

"சினிமா".

"ஓ. எல்லா ஆங்கில படங்களும்".

"டாவின்சி கோட் பார்த்தீங்களா".

"சேசே. மசாலா படம் தான் பார்ப்பேன். அது சீரியஸ் படம். எனக்கு ஜேம்ஸ் பாண்டி, ஸ்டார் வார்ஸ் மாதிரி மூளையே யூஸ் பண்ணாத படமா இருக்கனும்".

"சே. இவன் ராஜில்லை" என்று நினைத்துக் கொண்டாள்.

"தமிழ் ... "

"தமிழில் நல்ல எழுத்தாளர்களே இல்லை".

"சாண்டில்யன், கல்கி.... "

"என்னங்க, நான் 28, 58 இல்லை".

"அப்ப பாலகுமாரன்".

"பாலகுமாரன்லா ஒரு எழுத்தாளரா".

"என்ன இப்படி சொல்லிட்டீங்க".

"வைரமுத்து பாட்டாவது பிடிக்குமா".

"வைரமுத்து காசுக்காக கண்டதை எழுதும் ஒரு வணிக எழுத்தாளர். அவரோட பாட்டை ரசிக்கறதுக்கு நான் முன் சீட்டு ஆளாக இருக்கனும்".

என்னடா எதுக்கும் ஒத்து வரமாட்டேங்கறானே இவன்.

"ஆன்மீகத்தில் ஆர்வம் உண்டா".

"ஓ ராசி பலன் படிப்பேன்".

"ராசி பலன் படிக்கறது ஆன்மீகம் இல்லை" என்றாள் காட்டமாக.

"ஹா ஹா. மாலினி எனக்கு பாக்ஸ்ட்ரீட் பாய்ஸ், ஸ்பெஸ் கேர்ல்ஸ், அக்வோ இப்படி கன்னாபின்னான்னு சவுண்ட் வர்ற பாட்டுக்கள் தான் பிடிக்கும்".

"அமெரிக்கா எப்படி" என்று கேட்டான்.

"அமெரிக்கா அருமையான ஊர். அவரவர்கள் அவர்களது வேலையை பார்க்கிறார்கள். அநாவசியமாக இன்னொருவர் வாழ்வில் மூக்கை நுழைப்பதில்லை. இயற்கை கொஞ்சும் ஊர். மனதுக்கு மிகவும் அமைதி".

"என்ன நீங்க. ராஜ் சாரை கேட்டா அவர் அமெரிக்காவை பற்றி பொரிஞ்சு தள்ளராரு. நீங்க சொல்றது வேற மாதிரி இருக்கே".

"குமார், ராஜகோபால் ஒரு வித்தியாசமான மனிதர். அவருடைய சிந்திக்கும் விதம் முற்றிலும் வேறாக இருக்கும். அவர் ஒரு ஜீனியஸ். அவருடைய கருத்துக்கள் சரியாக இருக்கலாம். ஆனா, இது என்னோட கருத்து".

"நீங்க சொல்றமாதிரியெல்லாம் அவர் இருக்கற மாதிரி தெரியலையே. ரொம்ப டல் மனுஷன் மாதிரிதான் இருக்காரு. தம் அடிக்கறதில்லை தண்ணி அடிக்கறதில்லை. பார்ட்டியில் மனுஷன் ஒரு ஓரமாயில்லை இருந்தாரு".

"ஹா. குமார். நான் ராஜகோபாலை நெருக்கத்தில் பார்த்திருக்கிறேன். அவர் மிகவும் மாறிவிட்டார். ஆனால் அவர் நினைச்சாருன்னா ஒரு கூட்டத்தையே கட்டுபடுத்த முடியும்".

"அப்படியா" என்று கேட்டான் ஆச்சர்யமாக. "அவரு அமெரிக்காவே பிடிக்கலைன்னு சொல்லிட்டு அமெரிக்க பெண்மணியை கல்யாணம் பண்ணி கூட்டிக்கிட்டு வந்திட்டாரு போலிருக்கு".

"ஆமாம். அது ஒரு சுவாரஸ்யமான காதல் கதை" என்றாள் மாலினி யோசனையுடன். சரியான நேரத்தில் கோபாலை சந்தித்திருந்தால் நான் இன்று திருமதி ராஜகோபால் இல்லையா என்று நினைத்தவாறே பெருமூச்சுவிட்டாள்.

இப்படியே பேசிக் கொண்டே வந்தவர்கள் நுங்கம்பாக்கத்தை அடைந்திருந்தார்கள்.

"மாலினி, உங்களிடம் ஒரு கோரிக்கை. என் கையால ஒரு காபி. மேலே வர்றீங்களா".

"என்ன" என்றாள்.

"பயப்படாதீங்க. நான் ரொம்ப நல்ல பையன்" என்றான் பெரிதாக சிரித்துக் கொண்டே.

அவன் சிரிப்பே இவளுக்கு எரிச்சலாக இருந்தது. ஒரு காபி தானே. சரியென்று நினைத்துக் கொண்டே, காரை நிறுத்துவிட்டு மேலே சென்றாள்.

உள்ளே நுழைந்ததும் க்ளாசிக் மைல்ட்ஸ பெட்டிகளும் புகை நாற்றமும் குப்பென்று அடித்தது. வந்த 15 நாட்களில் அவன் கொண்டு வந்த பெட்டிகள் அங்குமிங்கும் கிடந்திருந்தன. டிவியின் மேல் அவன் பனியன் உலர்ந்துக் கொண்டிருந்தது.

அங்குமிங்கும் மென்பொருள் புத்தகங்கள், ஷூஸ், சாக்ஸ், காலி கோக் பெப்ஸி பாட்டில்கள், பீர் பாட்டில்கள் என்று ஒரு பேச்சுலரின் ரூமின் அனைத்து தகுதிகளும் இருந்தது. சே, ராஜின் அறை ஒரு கோவில் போல இருக்கும். அவனும் தான் அப்போது பேச்சுலர். இவனும் இருக்கிறானே. ராஜூக்கு எந்த கெட்ட பழக்கமும் இல்லை. ஆனால் இவனுக்கோ எல்லா கெட்டபழக்கங்களும்.

"ஒரு நாளைக்கு எத்தனை சிகரெட்" அங்கு நிரம்பி வழியும் ஆஷ்ட்ரேவை பார்த்தவாறே கேட்டாள் மாலினி.

"10-12, சில நாளைக்கு அதிகம்".

"சில நாள்னா... "

"சனி, ஞாயிறு, அரை டஜன் படம் கொண்டுவந்து பார்க்கும் போது அதிகமாயிடும். ஹா ஹா" என்று சொல்லி ஏதோ சாதனை போல் சிரித்தான்.

ஒரு முறை காதலில் தோற்றவர்கள் மற்றொருவரை சந்திக்க நேர்ந்தால் தன்னுடைய முதல் காதலுடன் ஒப்பிட்டு பார்க்கிறார்கள். அப்படி புதிதாக சந்தித்த நபர் தன்னுடைய முதல் காதலுடன் எல்லா விததத்திலும் அதிக தகுதி வாயந்திருந்தாலே அவர்கள் வாழ்கைக்குள் நுழைய விடுகிறார்கள். அப்படி இல்லையென்றால் அடுத்து அவர்கள் வாழ்கையில் வரும் நல்ல துணைகளையும் தன் முதல் காதல் போல் இல்லை என்று ஒதுக்கிவிடுகின்றனர். இது ஒரு மனப்போராட்டம். இது ஒரு கணிதம். இது மதிப்பெண் போடும் ஒரு பரீட்சை.

இரண்டாவது முறை காதலிக்க முடியாது என்பதெல்லாம் இல்லை. ஒரு முறை காதல், கதைக்கு மட்டுமே பொருந்தும். நிஜ வாழ்கையில் இரண்டாவது மூன்றாவது காதல் சாத்தியமே. அதற்கான சாத்திய கூறுகளை சூழலை ஏற்கும் மனப்பக்குவம் வரவேண்டும்.

முதல் காதலனைப் போலவே அல்லது முதல் காதலியைப் போலவே என்று ஒப்பிட்டு பார்ப்பது தவறு. ஏனென்றால் இரு மனிதர்கள் ஒரே மாதிரி இருப்பது சாத்தியமே இல்லை. சில குணங்கள் ஒத்துப்போகலாம். எல்லாமும் ஒத்துப்போக முடியாது.

அவள் கண்கள் ஆணுறைகளை தேடியது.

"என்ன பார்க்கறீங்க. அது மட்டும் கிடைக்காது".

அதிர்ச்சியுடன் "எது மட்டும் கிடைக்காது" என்றாள் மாலினி.

"குடிக்கிற தண்ணிதானே தேடறீங்க. நமக்கு ஐஸ் வாட்டர் தான். இதோ எடுத்துட்டு வர்றேன். தப்பா எடுத்துக்காதீங்க. ரூம் சுத்தமா இல்லை. இன்னிக்கு மட்டும் இல்லை. என்னிக்கும் இப்படித்தான். இன்னிக்கு உங்களை மேல கூப்பிடுவேன்னு எனக்கே தெரியாது".

"பரவாயில்லை குமார். காபி போடுங்க நான் கிளம்பனும்".

"இப்படி பீர் சிகரெட்டுன்னு இருந்தும் ஃபிட்னெஸ் எப்படி மெயின்டைன் பண்றீங்க".

"ஹா ஹா. அதுவா, அங்கே பாருங்க" என்று டென்னிஸ் ராக்கெட்டை காட்டினான்.

ஆர்வமாய் ஓடிச் சென்று அதை எடுத்தாள். "ஓ டென்னிஸ் விளையாடுவீங்களா. எனக்கு கத்துக்கனும் ரொம்ப ஆசை" என்றாள்.

"கத்துக் கொடுத்தா போச்சு" என்றான் சகஜமாக.

அன்று மாலினியின் கணிதத்தில் குமார் பாஸ் மார்க்கூட வாங்கவில்லை. ஆனால் பெயிலும் ஆகவில்லை.

# 12

5 மாதங்களுக்கு பிறகு எங்கும் அலையவேண்டாம் என்று மருத்துவர் சொல்லியிருந்ததால் அடுத்த வாரம் விழுப்புரம் போய் வரலாம் என்று முடிவ செய்திருந்தனர் ராஜகோபாலும் சிந்துவும்.

சனிக்கிழமை அதிகாலையில் கிளம்பிவிட்டனர். சென்ற முறை மாதிரி அம்மனை கதவின் பின்னால் நின்று தரிசிக்க வேண்டாமே என்று.

அம்மன் தரிசனம் முடிந்ததும் நண்பர்களை சென்று சந்தித்தான் ராஜ். கம்பன் நகர் சென்று வீட்டை பார்த்தனர். அருகாமையில் இருந்த சிவகுமார் தான் வீட்டு வாடகை வசூல் செய்து வங்கியில் போட்டு வந்தார். அப்பாவின் நண்பர். மாலினியின் மாமா. அவரை போய் பார்த்து ஒரு நன்றி சொல்லிவிட்டு வரலாம் என்று அவர் வீட்டில் நுழைந்தனர் இருவரும்.

"வாங்க வாங்க" என்று அமோகமாய் வரவேற்று அமர வைத்தார் சிவகுமார்.

"காபி கொண்டு வா மாலினி. யார் வந்திருக்காங்க பாரு" என்றார்.

தக் கென்று இருந்தது ராஜ்க்கு. மாலினி வந்திருக்கிறாளா.

"ஹாய் மாலினி எப்படி இருக்கே. எப்படி வந்தே" என்று கேட்டான் ராஜ்.

சிலியாவுக்கு அங்கு மாலினியை பார்த்தது அதிர்ச்சியாக இருந்தது. அவளால் சம்பிரதாயத்திற்கு கூட சிரிக்க முடியவில்லை. "ஹாய் மாலினி" என்றாள் அதிக

ஆர்வம் இல்லாதவளாய்.

"நான் பஸ் பிடிச்சு வந்தேன்".

"ஏன். எங்களோட வந்திருக்கலாமே".

"எனக்கு நீங்க வர்றீங்கன்னு தெரியாது".

சிவகுமார் குறுக்கிட்டு, "என்ன ஒரே ஆபீஸ்ல வேலை செய்யறீங்க பேசி வச்சிக்கலையா விழுப்புரம் வந்ததை பற்றி".

சட்டென்று திரும்பி ராஜை பார்த்தாள் சிலியா. அவள் பார்வையை அலட்சியம் செய்தவாறே ராஜ் மாலினியை பார்த்து, "ஏன் மாலினி காரில் வந்திருக்கலாமே" என்றான்.

"அத்தனை தூரம் கார் ஓட்டி வர்றதுக்கு தயக்கமா இருந்தது" என்றாள்.

"ராஜகோபால் நீங்களாவது மாலினிக்கு சொல்லக்கூடாது. அவ கல்யாணமே செஞ்சிக்க மாட்டேங்கறாப்பா" என்றார் ஆதங்கத்துடன்.

"மாமா......." என்று கண்களால் அவரை நிறுத்தினாள் மாலினி.

சற்று நேரம் பேசிவிட்டு, "வர்றீங்களா சென்னையில் டிராப் செய்திடறேன்" என்றான் ராஜ். சிலியா அதை சற்றும் விரும்பவில்லை.

"இல்லை நான் திங்கள் காலையில் தான் கிளம்பி வரப்போறேன். நீங்க போங்க" என்றாள் மாலினி. நிம்மதி பெருமூச்சு விட்டாள் சிலியா.

சற்று நேரம் பேசிவிட்டு வண்டியை எடுத்தான் ராஜ்.

சிறிது தூரம் சென்றதுமே ராஜை பார்த்து சிலியா, "ராஜ், மாலினி உன் ஆபீஸ்ல வேலை செய்யற விஷயத்தை ஏன் என்கிட்ட மறைச்சே" என்று கேட்டாள்.

வண்டியை சாலையோரமாக இருந்த அசோகர் காலத்து ஆலமரத்தின் கீழ் நிறுத்தினான். அவள் வசதியாக உட்காரவேண்டும் என்பதற்காக முன் இருக்கையை பின்னால் தள்ளியிருந்தான்.

திரும்பி இடக்கை பக்கமாக அவளை ஆழ்ந்து நோக்கினான். அவள் முகத்தில் விழுந்த பொன்னிற கூந்தலை மெதுவாக கைகளால் ஒதுக்கினான்.

"சிலியா, நீ என் கூட கல்யாணத்துக்கு முந்தையே அதீத நம்பிக்கை வைத்து என் கட்டிலில் படுத்த அதே சிலியாதானா நீ" என்று கேட்டான்.

அமைதியானாள் அவள்.

"உனக்கு ஞாபகம் இருக்கா. கடைசி முறை விழுப்புரம் வந்தபோது முரளி நிஜமா போன் பண்ணானான்னு மொபைல்ல தேடிப்பார்த்தே. சிலியா, நான் ஒரு மென்பொருள் வல்லுனர். எனக்கு வந்த மெயிலை நீ படிச்சா எனக்கு தெரியாதா. மாலினிக்கு மாற்றல் ஆனா மெயிலை நீ படிச்சிட்டேன்னு எனக்கு தெரியும். நீயா கேட்பேன்னு நான் இருந்தேன். ஆனா நானா சொல்றதா இல்லை. நீ இருக்கற நிலையில் அதை எப்படி எடுத்துப்பியோன்னு சொல்லாம விட்டுட்டேன்".

அவள் சற்றும் சகஜமாக வில்லை.

மெதுவாக அவள் கைகளை பிடித்துக் கொண்டான் ராஜ். "சிலியா, நீ உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பல மாற்றங்களை சந்திச்சிகிட்டு வர்றே. நான் எப்போதுமே உன்னோட இருக்கேன் சிலியா. அழகான துருதுருவான சிலியாவா நீ இல்லேன்னா கூட உன் மேல நான் வெச்சிருக்கற காதல்ல எந்த மாற்றமும் வராது. ஒவ்வொருத்தரும் பல மாறுதல்கள் சந்திக்கிறோம். என் கண் முன்னாடி மாலினி இல்லை ஆயிரம் தேவதைகள் வந்தாலும் நான் முழுசும் உனக்காகத்தான். எனக்கு பொறுமை அதிகம். உனக்கே தெரியும். நீ சகஜமாக காத்திருக்கேன். நீ சகஜமாகாட்ட கூட காத்திருக்கேன்".

"குழந்தைக்கு பிறப்பு கொடுக்கறது தாயுக்கு இரண்டாவது பிறப்புன்னு

சொல்வாங்க. ஒரு வேளை நீயா குழந்தையான்னு வந்தா நீ தான் வேணும் எனக்கு. ஒரு வேளை நீ குழந்தை டெலிவரி பண்ற நேரத்தில செத்திட்டீன்னா அடுத்த நிமிஷம் நானும் உயிரோட இருக்க மாட்டேன். நீ இல்லாத ஒரு நிமிஷம் கூட இந்த உலகத்தில என்னால நினைச்சி பார்க்க முடியாது".

"நீ இப்படித்தான் இருக்கனும் அப்படின்னு நான் சொல்லலை. ஆனால் நீ என் மேல வெச்சிருக்கற நம்பிக்கையை மட்டும் மாற விடாதே. அது உன்னை பாதிக்கும். நீ சந்தோஷமா இல்லேன்னா நானும் சந்தோஷமா இருக்க மாட்டேன்".

அவளை அணைத்து, "மாலினிக்கு ஒரு க்ளைமாக்ஸ் வெச்சிருக்கேன் கவலைப்படாதே" என்று சொல்லி முரளி கொடுத்த ஆலோசனையை பற்றி சொன்னான்.

"ராஜ், உனக்கு அருமையான நண்பர்கள்".

"ஹா ஹா. அருமையான மனிதனுக்கு அருமையான நண்பர்கள்" என்றான்.

அவள் மனம் நிம்மதி அடைந்திருந்தது.

காதல் எப்போதும் ஒரே சீராக இருப்பதில்லை. காதல் நம்பிக்கை, அன்பு, பாசம், நட்பு, உறவு, உதவி என்று பல பரிமாணங்கள் எடுக்கிறது. காதலிப்பவன் காதிலிப்பவளிடம் நான் சொல்லாவிட்டால் கூட நான் அவள் மேல் காதல் கொள்கிறேன் அதில் எந்த மாற்றமும் இல்லை என்பதை அவளாகவே உணரவேண்டும் என்று சொல்வதில் நியாயம் இல்லை. சில சமயம் அதை பேசித் தெளிவு செய்ய வேண்டிய கட்டாயத்திலும் அவன் இருக்கிறான்.

சில விஷயங்களை மறைப்பதும் தப்பில்லை. ஆனால், அவளாகவே அதை அறிந்துக் கொள்ளும் வாய்ப்பு இல்லை எனும் பட்சத்தில். அவளாகவே தெரிந்துக் கொள்ளும் வாய்ப்பு இருக்கும் பட்சத்தில் பக்குவமாக சொல்லி புரிய வைப்பதும் அவன் கடமை.

அங்கு ராஜ் அதைதான் செய்துக் கொண்டிருந்தான். காதலை பலப்படுத்துதல், re-inforcement எப்போதும் செய்ய வேண்டிய கடைபிடிக்க வேண்டிய ஒரு செயல். இது காதலை பலப்படுத்துகிறது. நம்பிக்கை உறுதி செய்கிறது. இதை செய்வதில் தப்பே இல்லை. மாறும் மனநிலைகளில் இது மிகவும் அவசியமாகிறது. ஒரு புயல் மழை வந்துச் சென்ற பிறகு வீட்டை பழுதுபார்த்தல் நியாயம் தானே. அங்கு அப்பேர்ப்பட்ட ஒரு பழுதுபார்க்கும் வேலை மனித உறவுகளுக்கு இடையே நடைபெற்றுக் கொண்டிருந்தது.

# 13

இரண்டு எதிர் துருவங்களுக்கு இடையே அங்கு நட்பு அதிகரித்துக் கொண்டிருந்தது. ஒரு பெண் தான் விரும்பும் விஷயங்களை ரசிக்கும் விஷயங்களை தன்னுடைய துணைவனும் விரும்ப வேண்டும் என்பது காதலில் ஒரு ரகம். சில சமயம் தன்னுடைய ரசனைக்கு முற்றிலும் எதிரான ஒருவனை அவள் விரும்புகிறாள். காரணம் அவள் தன்னுடைய உலகத்திலிருந்தும் சில நேரம் வெளியே செல்ல விரும்புகிறாள். அப்படி செல்லும் போது ஒரு பாதுகாப்புடனே செல்ல விரும்புகிறாள். அந்த வித்தியாசம் அந்த புதுமுயற்சி தன்னுடைய காதலனுடன் செய்வதில் அவள் அளவில்லா மகிழ்ச்சியும் அடைகிறாள்.

அலுவலகத்திற்கு வந்த குமார் அனைவருக்கும் ஹாய் சொல்லிவிட்டு தன்னுடைய அறைக்கு சென்று அமர்ந்தான். அந்த ஒரு சந்திப்பிற்கு பிறகு வேறு சந்திப்புகள் இல்லை. ஆனால் மதிய உணவு நேரம் வாய்ப்புகள் ஏற்படுத்தி தந்தன.

விடுமுறைகளில் டென்னிஸ் பயிற்சிக்கு சென்றாள் மாலினி. முதலில் வெறும் பார்வையாளராக இருந்தாள்.

குமார் சிக்கென்று டென்னிஸ் ஆடையில் நெற்றியில் வேர்வை உறிஞ்சும் பட்டை கட்டிக்கொண்டு கலக்கலாக இருந்தான். கோர்டின் விளிம்பில் நின்று அவன் குதித்து சர்வ் செய்தது பார்க்க நன்றாக இருந்தது.

அவனிடம் பேசுவதற்கு தலைப்புகளில் பஞ்சமே இல்லை. அரசியல், சினிமா, சமைப்பது என்று அனைத்தையும் பேசுவான். ஆனால் அவனிடம் பேசி முடித்த பிறகு ஏதாவது தகவல் கிடைத்ததா என்றால் ஒன்றுமே இருக்காது. ராஜிடம்

அப்படியில்லை. அவன் தகவல் களஞ்சியம். பல விஷயங்கள் தெரிய வரும். அவனுடம் பேசும் போது மூளை பயன்பாட்டில் இருக்கும். ஆனால் குமாரிடம் பேச மூளையே தேவையில்லை.

அவளை தொடாமலே டென்னிஸ் பயிற்சி சொல்லிக்கொடுத்தது அவன் கண்ணியத்தை காட்டியது. பீர் சிகரெட் அடிப்பவர்கள் எல்லாம் வில்லன்களாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்பதை உணர்ந்தாள் மாலினி.

வேலைகளில் சூறப்புலி அவன். எதற்காக தான் விரும்பும் படமும் பாடல்களும் எழுத்தாளர்களும் அவன் விருப்பமாக இருக்கவேண்டும். அவசியம் இல்லையே என்ற ஞானோதயம் அவளுக்கு வந்தது.

தொலைபேசி ஒலித்தது. "சொல்லுங்க குமார்" என்றாள்.

"சாயங்காலம் மாயாஜால்" என்றான்.

அமைதியாக இருந்தாள்.

"நான் வேணா ஜோசியம் பார்த்துட்டு வரட்டுமா".

"எதுக்கு".

"6.00 டூ 8.00 நல்ல நேரமா நீங்க என்கூட வர்றதுக்கு" என்றான்.

"ஹா ஹா. தேவையில்லை. போகலாம்" என்றாள்.

"வாவ். இன்னிக்கு எனக்கு அதிர்ஷ்டம் போட்டிருந்தானே ராசிபலனில்".

"ஒ ரொம்ப ஐஸ் வைக்க வேண்டாம்" என்றுவிட்டு போனை வைத்தாள். என்றாவது அவன் அவளை வெளியே கூப்பிடுவான் என்று அவள் எதிர்பார்த்தது தான். ஆனால் அவன் எப்போதெல்லாம் கூப்பிடுவான் என்று அவள் நினைத்தாளோ அப்போதெல்லாம் அவன் கூப்பிடவில்லை. தன்னுடைய பிறந்த

நாள் அன்று வெளியே கூப்பிட்டுச் சென்று பார்ட்டி கொடுப்பான் என்று எதிர்பார்த்தாள்.

பல சமயம் சிறிய எதிர்பார்ப்புகளும் அதில் ஏற்படும் தோல்விகளும் வாழ்கையின் சுவையை கூட்டுகின்றன. 9லிருந்து 1 மணி வரை என்னமோ அவன் சக அலுவலகரிடம் பேசுவது போல் பேசுவான். நகைச்சுவை கூட அலுவலகம் சம்பந்தப்பட்டதாய் இருக்கும். மதிய உணவு இடைவெளியில் மாமன் மகளிடம் பேசுவது போல் ஒரு உரிமை. மீண்டும் அலுவலக குமார். அவனுடைய செயல் வேடிக்கையாக இருந்தன.

பீர் குறைத்துக் கொள் சிகரெட் குறைத்துக் கொள் என்று எந்த வித கட்டுப்பாடுகளையும் அவள் வைக்கவில்லை. அதனாலே அவனுக்கு மிகவும் பிடித்து போயிருந்தது மாலினியை. இருவரும் ஒருவர் மேல் ஒருவர் காதல் கொண்டு இருப்பதை இன்னும் சொல்லிக் கொள்ளவில்லை.

அதுவும் ஒரு எதிர்பார்ப்பை இருவரிடத்திலும் ஏற்படுத்தியிருந்தது.

ராஜ் மாலினியை அழைத்தான். சுமார் 5.30 மணி மாலையில். "டான் ஒரு கான்பரென்ஸ் கால் இருக்குன்னு சொல்லியிருக்காரு. எங்கேயும் போயிடாதே மாலினி" என்றான்.

அவள் விருப்பம் இன்றி "சரி" என்று சொல்லிவிட்டு சென்றாள். தன்னறைக்கு சென்றதும் குமாரிடம் போன் செய்து ப்ரோகிராம் கான்சல் என்றாள்.

"ஏன்".

"பாஸ் இருக்க சொல்லியிருக்காரு".

"இன்னிக்கா அதிர்ஷ்ட நாளுன்னு போட்டிருக்கான். இரு தினமலருக்கு போன் செய்து அவங்களை ஒரு வழி பண்றேன்" என்று விட்டு போனை வைத்தான்.

மறுநாள் செல்ல திட்டமிட்டனர்.

மறுநாளும் ஏதோ காரணம் சொல்லி அவளை நிறுத்தினான் ராஜ்.

இது மறுபடியும் தொடர்ந்தது.

"கோபால், ஏன் தினமும் என்னை போகவிடாம செய்யறீங்க".

"என்ன மாலினி. ஆபீஸ் விஷயமா தானே உங்களை இருக்க சொல்றேன்".

"பொய் சொல்றீங்க கோபால். டான் போன் போடறதா ஒன்னும் சொல்லவே இல்லை. நான் அவர்கிட்டே சாட்ல பேசிட்டேன். எதுக்காக என்னை நிறுத்தறீங்க".

"மாலினி, நீ குமாரோட பழகறது எனக்கு கொஞ்சம் கூட பிடிக்கலை".

"அதை சொல்றதுக்கு நீங்க யாரு".

"என்ன மாலினி நீ இப்படி சொல்றே. நீ என்னை உயிருக்குயிராக காதலிக்கறே. எனக்காக கல்யாணம் செய்துக்காம இருக்கே".

"காதலிச்சேன் கோபால். இப்ப இல்லை".

"என்ன சொல்றே மாலினி. உனக்காக நான் மனசை மாத்திகிட்டேன். உனக்கு விருப்பம் இருந்தா நான் உன்னை இரண்டாம் கல்யாணம் பண்ணிக்கறேன். இல்லைன்னா சிலியாவை விவாகரத்து செய்யறேன்".

"அப்ப சிலியாவோட பிள்ளை".

"அதை பத்தி நாம் ஏன் கவலை படனும். மாலினி, இப்ப சொல்லு. எப்ப கல்யாணம் பண்ணிக்கலாம்".

"கோபால் நீங்க இத்தனை கீழே போயிடுவீங்கன்னு நான் நினைக்கலை. உங்களை எத்தனை மதிச்சேன் நான். நீங்களா இப்படி பேசறது".

"மாலினி உனக்கு என்ன பிரச்சனை".

"எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை. கோபால், நான் குமாரை காதலிக்கறேன். இத்தனை நாள் அதை அவர்கிட்டே சொல்லலை. நீங்க என் மனதை உறுத்திக்கிட்டு இருந்தீங்க. இப்ப நீங்க பேசனதால தெளிவாயிடுத்து. பட்டினத்தார் பேசறவங்க எல்லாம் சாமியாரும் இல்லை. விவேகானந்தர் படிக்கறவங்களெல்லாம் ஞானியும் இல்லை. நான் வர்றேன்" என்று விட்டு விரைவாக ஓடிச் சென்று குமாரின் அறைக்குள் நுழைந்தாள்.

பல சமயம் சரியாக துண்டிக்கப்படாத பழைய காதல் வாழ்கையில் குறுக்கிட்டு பிரச்சனைகள் உண்டாக்குகின்றன. சரியாக முடிவுரை கொடுக்கப்படாத கதைகளின் நிலைமையும் படிப்பவர்களை பல விவாதங்கள் செய்யத் தூண்டுகின்றன. ராஜ் இந்த முற்றும் போடாத காதலுக்கு சரியாக முற்றும் போட்டான் இன்று.

"குமார், நான் உங்களை விரும்பறேன். கல்யாணம் பண்ணிக்க ஆசைபடறேன். நீங்கள் என்னை விரும்புகிறீர்களா" என்று தடாலடியாக கேட்டாள்.

குமார் எதுவும் பேசாமல் மேஜையிலிருந்த தினமலரை புரட்டி ராசி-பலன் பக்கத்தை எடுத்தான். "மாலினி, இன்னிக்கு திருமணங்கள் டைடல் பார்க்கில் நிச்சியிக்கப்படுகின்றன அப்படின்னு போட்டிருக்கான்" என்றான்.

அவள் கோபமாக அவனை அடிக்க வர அப்படியே அவளை கைகளுக்குள் அடக்கிக்கொண்டான்.

ராஜ் முரளிக்கு போன் செய்து, "வொர்க் அவுட் ஆச்சிடா மச்சான்" என்றான்.

"சும்மாவா என் ஐடியாவச்சே".

"நீ ஒரு ஜீனியஸ்".

"புதுசா எதாவது ஒரு விஷயம் இருந்தா சொல்லு" என்றுவிட்டு போனை வைத்தான் முரளி.

சரியான நண்பர்கள் தரும் சரியான ஆலோசனைகள் வாழ்கையை சீராக்குகின்றன. ராஜ் அந்த விஷயத்தில் மிகவும் அதிர்ஷ்டக்காரன் தான்.

சிலியாவுக்கு போன் போட்டு விஷயத்தை சொன்னான். "ராஜ், யூ ஆர் ப்ரில்லியன்ட்" என்றாள்.

அந்த ஆத்மார்த்தமான காதல் ஜோடி விரைவில் வீட்டில் ஒரு குட்டி தேவதையின் ஜனனத்திற்கான தயாரிப்புகளை மும்முரமாக செய்யத் தொடங்கியது.

செல்லியம்மன் தாயின் பட்டியலில் இன்னுமொரு பக்தரின் எண்ணிக்கை கூடியது.

**முற்றும்**



**மோகன் கிருட்டிணமூர்த்தியின் பிற படைப்புகள்:**

1. மேற்கே செல்லும் விமானம் – 4 பாகங்கள்
2. கடைசி பேட்டி
3. மெல்லக் கொல்வேன்
4. என் கை பிடித்தவன்
5. போதாதெனும் மனம்
6. கறுப்பு வரலாறு
7. ரிதுவேந்தர்
8. கணினிக் காதல்
9. நேற்றைய கல்லறை
10. இன்னும் பெயர் வைக்கவில்லை
11. காதல் இல்லையேல் காதல்
12. Westbound Flight (மேற்கே செல்லும் விமானம் மொழி பெயர்ப்பு)
13. Influences of Unknown Factors on Mankind

இவற்றை நீங்கள் கீழ்கண்ட தளங்களில் காணலாம்

1. Google Books
2. Apple iBooks
3. Amazon Kindle

உங்கள் கருத்துக்களை leomohan@yahoo.com எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள். நன்றி.

Also subscribe to www.youtube.com/leomohan for Video Series in Tamil. Stock Market Training, Corporate World Challenges and 5-Minute Videos are the topics currently available. Visit www.soundcloud.com/leomohan or www.shoutengine.com for Tamil Audio podcasts.